விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 02 சனிக்கிழமை (18.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 242

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம்

குற்றப் புலனாய்வு பிரிவினர் 3 மணி நேரம் விசாரணை

(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத்நொயார் கடத்தப்பட்டு, தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சுமார் 3 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில், கொழும்பு 7, விஜேராம வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்குச் சென்ற குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் ஆறு பேர், விசாரணைகளை முடித்துக் கொண்டு பிற்பகல் 2 மணியளவில் அங்கிருந்து சென்றனர்.

குறித்த சம்பவம் 23

வடக்கு, கிழக்கில் இராணுவத்திடமுள்ள

522 ஏக்கர் காணிகள் விடுவிப்பதற்கு ஒப்புதல்

(கொழும்பு)

இராணுவத்தினரால் விரைவில் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற 522 ஏக்கர் காணிப் பரப்பில் 80 சதவீதமானவை வடமாகாணத்துக்கு உரியவை என்று இராணுவப் பேச்சாளர் சுமித் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளில் 522 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு இராணுவத்தரப்பில் கோரப்பட்டுள்ள நிதியில் ஒரு 24

தெல்லிப்பழையில் 4.7 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் 4.7 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் 21ஆம் திகதி குறித்த காணி விடுவிக்கப்படவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. 24

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெர இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 20-ம் 24

தமிழரின் பிரச்சினையை தீர்க்க நினைத்தால் எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர்

புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்ற வேண்டும்

முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்) இந்த அரசு எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்றியே ஆக வேண்டும் எனத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க நினைத்தால் புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்ற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (23-ம் பக்கம் பார்க்க..)



சேறு பூசுவதற்கே மகிந்த ராஜபக்ஷவிடம் விசாரணை – பீரிஸ்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று மூன்று மணி நேரம் விசாரணை நடத்தியது. முன்னாள் ஜனாதிபதி மீது சேறு பூசுவதற்கே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் 23

2ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த கல்லறைகள்

திருமலையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

திருகோணமலை- குச்சவெளி, கும்புறுகஸ்வெவ காட்டுப் பிரதேசத்தில் 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான 43 இற்கு மேற்பட்ட கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை தொல்பொருள் திணைக்கள நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ. 23

கேரளாவில் வெள்ளம் 324 பேர் மரணம்; 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு

(ஆலப்புலா)

கேரளாவில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பில் ஆக 24

த.தே.ம.மு முல்லை அலுவலகம் இராணுவத்தினரால் உடைப்பு

பொலிஸில் முறைப்பாடு

(பனிக்கன்குளம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு எதிராக உள்ள வீதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் அமைந்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி செஞ்சோலையில் உயிரிழந்த மாணவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் 24

ஜனாதிபதி, பிரதமருக்கு எதிராகவும் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன

ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை நாம் பொறுப்பேற்கும் போது நெருக்கடியான பொருளாதாரத்துடன் கூடிய ஆழமான குழி இருந்தது. தற்போது அந்த குழியை கம்பெரலிய, வீடமைப்பு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களினாலும் கடன் மீள்செலுத்தலின் ஊடாக நிரப்பி விட்டோம். எனினும் 500 சதுர அடியை நாம் இன்னும் நிரப்பவில்லை. அந்த 500 சதுர அடி கூட மிகவும் ஆழமாகவே உள்ளது.

ஆகவே அந்த ஆழம் மிக்க குழியை நிரப்ப வேண்டுமாயின் ராஜபக்ஷவினரை மீண்டும் தலை தூக்க இடமளிக்க 23

எதிர்வரும் 24-ம் திகதி எல்லை நிர்ணய அறிக்கை சமர்ப்பிப்பு

மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகள் தேர்தலை, புதிய முறைமையின் கீழ் நடத்துவதற்குத் தேவையான தொகுதிகளைப் பிரிக்கும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை, எதிர்வரும் 24ஆம் திகதியன்று, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென, ஸ்ரீ 23

புலனாய்வாளரின் விசாரணை அரசியல் பழிவாங்கல்

மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தம்மிடம் விசாரணை நடத்தியது ஓர் அரசியல் பழிவாங்கல் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும்23

நல்லாட்சி அரசாங்கம் வீட்டுக்கு செல்லும் அத்தியாயம் ஆரம்பம்

கூட்டு எதிர்க்கட்சித் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கொழும்பில் திரண்டு எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளனர். அத்துடன் அரசாங்கம் ஆட்டம் காண்பதுடன், நல்லாட்சி வீடு செல்லும் அத்தியாயம் ஆரம்பிக்கும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் தலைவரான தினேஷ் 23



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மரண அறிவித்தல்

சிவப்பிரகாசம் யோகலட்சுமி (மணி)

புலோலி தெற்கு புலோலி பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் இல.61, ஆச்சிரம வீதி, புதுமுறிப்பு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் யோகலட்சுமி (மணி) நேற்று (17.08.2018) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மா-பொன்னுத்துரை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், கிளி (லண்டன்), நடராசா (அமெரிக்கா), ஈசு (பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவயோகேஸ்வரி (யோகம்) (பளை), காலஞ் சென்ற சிவயோகப்பிரகாசம் (கண்ணன்), சிவயோகேஸ்வரன் (மோகன்), சுமித்திரா (சுமி) (புதுமுறிப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நகுலன் (பளை), சாந்தி, காலஞ்சென்ற காந்தன் ஆகியோரின் மாமியாரும், ரேணு, வினுஷா, வேணுசன் (பளை), குணாலிசா (கிளி/செந்திரேசா மகளிர் கல்லூரி-உயர்தர மாணவி 2018), றிச்சாட் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-மகள் (சுமி)
0773056864

(சி-3529)

கொடிச்சீலை கட்டப்பட்டுள்ள பகுதிக்குள் கற்பூரம் விற்கத் தடை-மாநகர சபை

நல்லூர் ஆலயத்தில் கொடிச்சீலை அமைக்கப்பட்ட பகுதிக்குள் கற்பூரம் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர சபை அறிவித்துள்ளது.

அத்துடன், நல்லூர் ஆலய சூழலில் யாழ்ப்பாண மாநகர சபையால் அனுமதிக்கப்பட்ட கடைகள் தவிர்ந்த, ஏனைய நடைபாதை வியாபாரங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நேற்று இடம் பெற்ற சிறப்புக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் புடைவை நிலையமொன்றுக்கு பழக விரும்பும் மற்றும் அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் சமுகம் தரவும். 9.30 மணிக்கு வேலை ஆரம்பம்

லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
(சி-3533) யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள கரைச்சிக் குடியிருப்பில் 6 1/2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

0774861948

(சி-3536)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
FACULTY OF ENGINEERING
WALK-IN–INTERVIEW

Walk in interview for appointments to the following posts will be held **on 23.08.2018 at 9.00 am** at the **Board room, Faculty of Engineering, University of Jaffna, Ariviyal Nagar, Kilinochchi:**

Temporary Instructor in Civil Engineering / Electrical and Electronic Engineering / Mechanical Engineering / Engineering Mathematics/ Computer Engineering

Note:

1.The candidates for Temporary Instructor are expected to conduct the engineering laboratories covering all specializations of Civil and Environmental Engineering, Electrical & Electronic Engineering, Mechanical & Process Engineering and Computer Engineering.

2.Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Instructor.

SALARY SCALE - Temporary Instructor: Rs 33,100 /- p.m and other allowances approved by the UGC

Candidates are requested to appear with relevant certificates, NIC and **self-prepared applications including Curriculum Vitae.**

Registrar
University of Jaffna
17.08.2018

(C-3535)

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka

கலைமாணி பட்டப்படிப்பு 2016/2017 (வெளிவாரி) (புதிய பாடத்திட்டம்)
Bachelor of Arts Degree Programme – 2016/2017 (External) (New Syllabus)
(Semester Based Course Unit system and Grade Point Average Evaluation)

புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2018

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுமதிக்கான தகைமைகள்:

- க.பொ.த. (உ/த) பரீட்சை – 2016 அல்லது அதற்கு முன்னர் அங்கீரிக்கப் பட்ட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருப்பதுடன், பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% மான புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்
  அல்லது
- தேசிய கல்வியல் கல்லூரியில் கற்பித்தலில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றவர்கள்
  அல்லது
- ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றப்பட்ட அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள்
  அல்லது
- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மேற்குறித்த தகமைகளுக்கு தொடர்புடைய அல்லது சமமானது என கருதப்படும் தகமைகளைக் கொண்டவர்கள்.

மாணவர் தெரிவு:

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். *(பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்)*

விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:

1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 500 க்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 x 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:

விண்ணப்பங்கள் யாவும் பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு நேரடியாக அல்லது தபால் மூலமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 28.09.2018 (வெள்ளிக்கிழமை). *(விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)*

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
17.08.2018

1ஆம் ஆண்டு நினைவலையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
19
-
05
-
1937

மறைவு
01
-
08
-
2017

எமது குடும்பத் தலைவர்

அமரர் கணபதிப்பிள்ளை சிதம்பரலிங்கம்

ஆண்டொன்று ஆனதப்பா
அன்பு கொண்ட உம் வதனம்
அருகினில் இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது உங்கள் நினைவு எம் நெஞ்சோடு...

கடந்த 01.08.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை சிதம்பரலிங்கம் அவர்களின் 1ஆம் ஆண்டு. ஆத்மசாந்திப் பிரார்த்தனை (திவசம்) நாளை (19.08.2018) ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும்.

எனவே இந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நாகலிங்கமுதலியார் வீதி,
பருத்தித்துறை.

-குடும்பத்தினர்

(சி-3538)

மக்களுக்குச் சேவை செய்வதை மனதில் நிறுத்தி சட்டத்துக்கு அமைய கடமைகளைச் செய்ய வேண்டும்

அரச அலுவலர்களுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

அரச அலுவலர்கள் சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்படுவதை நிறுத்தி, மக்களுக்குச் சேவை செய்வதை மனதில் வைத்து சட்டத்துக்கு அமைவாக தமது கடமைகளைச் செய்யப் பழகிக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபை கொள்கை ரீதியாக மக்களுக்கு வழங்க நினைப்பதை அலுவலர்கள் செயற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



வடக்கு மாகாண "முகாமைத்துவ உதவியாளர் தரம்-3" இற்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று கைதடியிலுள்ள உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச அலுவலர்கள் சட்டத்துக்கு அமைவாக கடமைகளைச் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்படுவதை நிறுத்த வேண்டும்.

வடமாகாணம் இப்போது தான் முன்னிலைக்கு வந்து கொண்டு இருக்கிறது. பல வழிகளில் எமது செயற்பாடுகள் மற்றும் எமது அலுவலர்கள் தொடர்பாக தெற்கில் இருந்து வருபவர்கள் நல்ல முறையில் கூறுகிறார்கள். ஆகவே அதனையே எமது நற்குணமாகக் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். அதற்கேற்றவாறு எமது செயற்பாடுகள் அமைய வேண்டும்.

அரச அலுவலர்களுக்கு பல விதமான சவால்கள் ஏற்படக்கூடும். குறிப்பாக அரசியல்வாதிகள் சிலர் சட்டத்துக்குப்புறம்பான வேலைகளைச் செய்யுமாறு கட்டாயப்படுத்துவார்கள். அவர்களுக்கு நீங்கள் மசிந்து கொடுக்காமல் சட்டத்துக்கு அமைவாக மேலதிகாரிகளுடன் பேசி செயற்பாடுகளை முன்னெடுக்க முன்வர வேண்டும்.

சிறிய காலத்துக்குள் இவ்வாறான சீர்கேடுகள் எமது நிர்வாகத்துக்குள் நுழைந்து விட்டன. சட்டத்துக்கும் நியாயத்துக்கும் நல்ல ஆட்சிக்கும் புறம்பான செயல்களில் நாம் ஈடுபட்டு வந்துள்ளோம். அதைத் தொடர்ந்து செய்யக் கூடாது. புதிதாக அரச சேவைக்குள் வந்தவர்கள் புதிய வாழ்க்கை முறையைச் செயற்படுத்த பழக்கிக்கொள்ள வேண்டும்

மக்களுக்காக சேவை செய்வதை மறக்க வேண்டாம். வடக்குமாகாண சபை மக்களுக்கு என்ன கொடுக்க எண்ணியுள்ளதோ கொள்கை ரீதியாக எதைக் கொடுக்கலாம் எனக் கணித்து செயற்பட்டு வருகிறார்களோ அவற்றை நடைமுறைப்படுத்துவது அலுவலர்களின் கடமையாகும். மக்களுக்குச் சேவை செய்வதை மனதில் வைத்து தமது கடமைகளைச் சரியாகச் செய்யப் பழகிக்கொள்ள வேண்டும்.

மக்களின் முன்னேற்றத்தில் கரிசனையாக இருக்க வேண்டும். போருக்குப் பின்னர் எமது மாகாணத்தைக் கட்டியெழுப்ப ஒவ்வொருவரும் முயற்சி செய்து வருகிறோம். அதில் ஒவ்வொருவரும் பங்குதாரர்கள். எல்லோரும் கடமைகளை சரியாகச் செய்தால் தான் நிர்வாகத்தை நெறிப்படுத்த முடியும். யாராவது அதற்கு மாறாக நடந்தால் அது அனைவரையும் பாதிக்கும் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-9)

இலங்கையின் உண்மையான நண்பனை இழந்துவிட்டோம்

ஜனாதிபதி மைத்திரி இரங்கல்

(கொழும்பு)

இலங்கையின் உண்மையான நண்பனை நாம் இழந்துவிட்டோம் என அடல் பிகாரி வாஜ்பாய் மறைவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரங்கல்தெரிவித்துள்ளார்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தனது 93 ஆவது வயதில் டில்லி எய்மஸ் மருத்துவமனையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் காலமானார்.

அவரது மறைவுக்கு இந்திய ஜனாதிபதி, பிரதமர், மாநில முதல்வர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், கலை உலக பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்ற நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மைத்திரியின் உத்தியோகபூர்வ டுவிட்டரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இன்று, நாம் ஒரு பெரிய மனிதநேயமுடையவரையும், இலங்கையின் உண்மையான நண்பனையும் இழந்துள்ளோம். இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் ஒரு தொலைநோக்கு தலைவர் மற்றும் ஜனநாயகத்தின் ஒரு தீவிர பாதுகாவலராவார்.

இந்நிலையில் அவரது குடும்பத்தினர் மற்றும் மில்லியன் கணக்கான மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என மைத்திரி குறிப்பிட்டுள்ளார். (இ-7)

மகிந்தவிடம் வாக்கு மூலம் கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் வாக்குமூலம் பெறப்பட்டமைக்கு மினுவாங்கொட பிரதேச சபை தாமரை மொட்டு உறுப்பினர்கள் கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கத்திற்கு மூன்றாண்டுகள் பூர்த்தியாகின்ற சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதியிடம் விசாரணை செய்வது அரசியல் தந்திரம் என்று அந்த உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மினுவாங்கொடை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று உடுகம்பொல பிரதேச சபை கேட்போர் கூடத்தில் பிரதேச சபைத் தவிசாளரின் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து கொண்டு சபைக்கு வருகை தந்துள்ளனர்.

அரசியல் பழிவாங்கல் தவிர ரணில்-மைத்திரி அரசாங்கத்துக்குச் செய்வதற்கு வேறொன்றுமில்லை என்று மினுவாங்கொடை பிரதேச சபை தவிசாளர் கடும் எதிர்ப்பு வெளியிட்டார்.(இ-7)

சுயாதீனமாக செயற்படுவோம் என்று தெரிவித்துள்ளமை வெறும் நாடகமே

–கூட்டு எதிரணியை நோக்கி ஐ.தே.க. அமைச்சர் ஹரிசன்–

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவோம் என்று தெரிவித்துள்ளமை வெறும் நாடகமே என ஐ.தே.க அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தநிலையில் நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்களின் பின்னணியில் ஏதோவொரு அரசியல் சூழ்ச்சி ஒன்று இடம்பெறுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் அனைத்து விடயங்களுக்கும் சுதந்திரம் அளித்துள்ள நிலையில் அதனை தவறான வகையில் பயன்படுத்த சில சக்திகள் முயற்சிக்கின்றன.

எனினும் அதற்கு மக்கள் ஒருபோதும் இடம்தரப் போவதில்லை.

இதனிடையே, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் தாங்கள் சுயாதீனமாக செயற்படுவோம் என்று அறிவித்துள்ள போதிலும், அவர்கள் ஒருபோதும் சுயாதீனமாக செயற்படமாட்டார்கள் எனவும் அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.(இ-7)

தொடரூந்து பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை வேண்டும் - மகிந்த

(கொழும்பு)

தொடரூந்து தொழிற் சங்கங்களின் கோரிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தை மேற்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதுருகிரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

வெற்றிப்பாதைக்கு திரும்புமா இந்தியா?



இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் இன்று நெட்டிங்காமில் ஆரம்பமாகிறது. இதில் வென்றால் மட்டுமே தொடரை கைப்பற்றும் வாய்ப்பை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்ற இக்கட்டான நிலையில் களமிறங்கும் இந்திய அணி, எழுச்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் இரு டெஸ்டிலும் தோல்வியடைந்த இந்திய அணி 0-2 என தொடரில் பின்தங்கியுள்ளது. இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் இன்று நொட்டிங்காம் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

சொதப்பும் ஆரம்பம்

இந்திய அணிக்கு துடுப்பாட்டம்தான் பெரும் சிக்கலாக உள்ளது. ஆரம்ப வீரர்கள் முரளி விஜய் (20, 6, 0, 0) நான்கு இன்னிங்சில் 26 ஓட்டங்கள்தான் எடுத்தார். ஷிகர் தவான் (26, 13) தன் பங்கிற்கு ஏமாற்று கிறார். லோகேஷ் ராகுல் (4, 13, 8, 10) தன் பங்கிற்கு அணியை கைவிடுகிறார். டெஸ்ட் 'ஸ்பெஷலிஸ்ட்' புஜாரா (1, 17) களத்தில் நின்றால் மட்டும் போதும் என நினைப்பதால், அனைத்து நெருக்கடியும் அணித் தலைவர் ஹோலிக்கு வருகிறது. இவரும் முதுகுவலியில் இருந்து தற்போது தான் மீண்டுள்ளார்.

'நடுத்தர வரிசையில்' வரும் ரகானே (15, 2, 18, 13) பொறுப்பற்ற முறையில் ஆட்ட மிழப்பதும் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் (0, 20, 1, 0) கிடைத்த பொன்னான வாய்ப்பை வீணடிப்பதும் நீடிக்கிறது. இதனால் இன்று 20 வயது இளம் விக்கெட் காப்பாளர் ரிஷாப் பன்ட் அறிமுகம் ஆக வாய்ப்புள்ளது.

பந்துவீச்சில் இதுவரை 13 விக்கெட்டுக்கள் வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் இந்திய அணிக்கு மீண்டும் தொல்லை கொடுக்கலாம். சொந்த ஊரில் களமிறங்கும் பிரோட் (7 விக்), கர்ரான் (6), ஸ்ரோக்ஸ் (6), வோக்ஸ் (4) என பலர் பந்துவீச்சில் அசத்துவர் என நம்பலாம். இதனால் சுழல் வீரர் அடில் ரஷித்துக்கு அதிக வேலையில்லாமல் போகிறது.

பும்ரா வருகை

வேகப்பந்து வீச்சில் இஷாந்த் சர்மா, மொஹமட் ஷமி பரவாயில்லை என்றாலும் இன்று கைவிரல் காயத்தில் இருந்து மீண்ட பும்ரா அணிக்கு திரும்புவது சற்று நம்பிக்கை தருகிறது. சுழலில் குல்தீப் யாதவ் நீக்கப்பட்டு வழக்கம் போல இன்று அஷ்வின் மட்டும் களமிறங்கலாம். 'சகலதுறை வீரர்' என்ற பெயரில் அணியில் இருக்கும் பாண்ட்யாவுக்குப் பதில் ஜடேஜாவுக்கு வாய்ப்புக் கொடுத்தால் திருப்பம் ஏற்படலாம்.

மழை வருமா?

நொட்டிங்காமில் இன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை வராது. நாளை மழை வர 50 சத வீதம் வாய்ப்புள்ளது. 3, 4 வது நாளில் மேகமூட்டம் அதிகம் இருக்கும். கடைசி நாளில் மழை வரலாம்.

'சமன்' அதிகம்

நொட்டிங்காம், டிரன்ட் பிரிட் ஜில் இந்திய அணி 6 டெஸ்டில் விளையாடியது. இதில் ஒன்றில் மட்டும் (2007) வென்றது. 3 போட்டிகள் 'சமன்' ஆகின. 2ல் இங்கிலாந்து வென்றது.

ஸ்ரோக்ஸ் பலம்

பேர்மிங்காம் டெஸ்டில் தடுமாறிய இங்கிலாந்து அணி பிறகு விழித்துக் கொண்டது. ஆரம்ப வீரர் அலெஸ்டர் குக், ஜென்னிங்ஸ், அணித் தலைவர் ஜோ ரூட் துடுப்பாட்டத்தில் பலம் சேர்க்கின்றனர்.

போதை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட ஸ்ரோக்ஸ் இன்று அணிக்கு திரும்புவார் என்பதால் ஒலியே போப் வழி விட காத்திருக்கிறார். தவிர, பேர்ஸ்டோவ், வோக்ஸ், பட்லர் என துடுப்பாட்ட படை நீள்கிறது.

அண்மையில் காலமான முன்னாள் இந்திய அணித் தலைவர் அஜித் வடேகரின் இறுதிப் பயணம் நேற்று நடைபெற்றது. இதன்போது அவரின் புகழுடலை தாங்கிய ஊர்தி பயணித்தபோது...

முகுருசா அதிர்ச்சி தோல்வி

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருசா அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆவது சுற்றில் நேரடியாக விளையாட வாய்ப்பு பெற்ற நடப்பு சம்பியனும், 2 கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றவருமான கார்பின் முகுருசா (ஸ்பெயின்), 44ஆம் நிலை வீராங்கனையான லிசி சுரென்கோவை (உக்ரைன்) எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் கார்பின் முகுருசா 6-2, 4-6, 4-6 என்ற செட் கணக்கில் லிசி சுரென் கோவிடம் தோல்வி கண்டு வெளியேறினார்.

மற்றைய ஆட்டங்களில் கிகி பெர்டென்ஸ் (நெதர்லாந்து), மேடிசன் கீஸ் (அமெரிக்கா), அனெட் கோன்டாவிட் (எஸ்தோனியா), விம்பிள்டன் சம்பியன் ஏஞ்சலிக் கெர்பர் (ஜேர்மனி), ஆஷ்லே பார்ட்டி (அவுஸ்திரேலியா), மகரோவா (ரஷ்யா), எலிஸ் மெர்டென்ஸ் (பெல்ஜியம்), ஸ்லோனே ஸ்ரீபன்ஸ் (அமெரிக்கா), அரினா சபலென்கா (பெலாரஸ்) ஆகியோர் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்கள்.

ஓம் விஸ்வ விராட் பிரம்மா

மரண அறிவித்தல்

தியாகராசா உமாகாந்)

(ஊர்வணிகன் பற்று இயக்கச்சி)

ஊர்வணிகன் பற்று இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா உமாகாந் நேற்று (17.08.2018) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தியாகராசா (ஆச்சாரியார்) - யோகம்மா தம்பதிகளின் இரண்டாவது அன்பு மகனும் உமாசுதன், நிசாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2018) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊர்வணிகன் பற்று பத்தாவழை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-3541)

தொலைபேசி
077-8702618

தகவல்:-
குடும்பத்தினர்

தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு

முதலாம் கட்ட பேச்சில் இ.தொ.கா.வெளிநடப்பு

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின் முதலாங் கட்டப்· பேச்சுவார்த்தையிலிருந்து, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளிநடப்புச் செய்துள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மூன்று தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையிலான முதலாம் கட்ட பேச்சுவார்த்தை, முதலாளிமார் சம்மேளனத்தின் ராஜகிரிய அலுவலகத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவரும் பொதுச் செயலாளரும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவினரும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் யூனியன் சார்பில் அதன் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தலைமையிலான குழுவினரும் பங்கேற்றனர்.

மேலும், பெரும் தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு சார்பாக, அதன் தலைவர் எஸ்.இராமநாதன் தலைமையிலான குழுவினரும் பங்கேற்றனர்.

முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பில், 22 பெருந்தோட்டக் கம்பனிகளின் நிர்வாகிகளும் கலந்துகொண்டனர். இதன்போது, தொழிலாளர் தரப்பு நியாயங்களையும் பெருந்தோட்ட நிறுவனங்களால், தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளையும் மூன்று தொழிற்சங்கங்களும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளன.

இம்முறை, தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்துக்கான அடிப்படைச் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை, இ.தொ.கா முன்வைத்துள்ளது.

எனினும் முதலாளிமார் சம்மேளனம் அதற்கான எந்த முன்மொழிவுகளையும் வழங்கவில்லை என்றும் இதன் காரணமாகவே, இ.தொ.கா கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்ததாகவும் இ.தொ.காவின் உபதலைவர் எஸ்.அருள்சாமி தெரிவித்தார். (இ-7)

பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த வல்வெட்டித்துறையில் விசேட செயற்றிட்டம்

இக் கூட்டத்தில் செயற்றிட்டத்தினை மேற்பார்வை செய்ய தவிசாளர் தலைமையில் வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர், 2





(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகரைக் குட்பட்ட பகுதியில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்ட அறிமுகக் கூட்டம் SLCDF அனுசரணையுடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் (VOGT) வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் தவிசாளர் கருணானந்தராசா, செயலாளர் சி.பிரசாத், வல்வெட்டித் துறை நகர சபை உறுப்பினர்கள், வடமராட்சி நல்லொழுக்க நிறுவன இணைப்பாளர் க.ஆ.குலநாதன் மற்றும் அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

உறுப்பினர்கள், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் சுற்றுச் சூழல் அதிகாரி, வடமராட்சி நல்லொழுக்க நிறுவன ஊழியர் கொண்ட வழிகாட்டும் குழு அமைக்கப்பட்டது. (இ-7)

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் உட்பட 5 பேர் மாணிக்கக்கல் அகழ்ந்த குற்றச்சாட்டில் கைதாகினர்

(கொழும்பு)

அங்கம்பெதில்ல அம்பன் கங்கையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் ஒருவர் உள்ளிட்ட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெருமவிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை தொடர்ந்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு சுமார் 10 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு தேடுதலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

மீண்டும் வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்றால் வாகனங்களை அவதானமாகச் செலுத்துங்கள்

பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவுரை

(கரணவாய்)

போதிய பொலிஸார் இல்லாத நிலையில் நெல்லியடி பொலிஸ் நிலையம் இயங்கி வருவதாகவும் எனவே போதியளவு பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி கொனரா தெரிவித்தார்.

நெல்லியடி பகுதியில் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுவது குறித்து அவரிடம் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வீதி விபத்துக்கள் அதிகளவில் ஏற்படுவதற்கு சாரதிகளே காரணம்.

வாகனங்களை சாரதிகள் மிதமிஞ்சிய வேகத்தில் செலுத்துகின்றனர்.

இதனால் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதனால் உயிரிழப்புக்களும் நிகழ்கின்றன.

மோட்டார் சைக்கிள்களை செலுத்துவோர் மீண்டும் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்ற சிந்தனையில் அவதானமாக வாகனங்களை செலுத்த வேண்டும்.

போக்குவரத்து விதிகளை ஒழுங்குபடுத்துவதற்கு போதியளவு பொலிஸார் இல்லை.

தற்போது போக்குவரத்துப் பொலிஸார் நால்வர் மட்டுமே கடமையில் உள்ளனர். இதுதவிர ஆலய உற்சவகால கடமைகளுக்கும் பொலிஸார் சென்றுள்ளனர்.

இந்நிலையில் போக்குவரத்து பொலிஸாரும், மற்றைய பிரிவுகளில் கடமையாற்றும் தமிழ்ப்பொலிஸார் உட்பட மேலதிக பொலிசார் நியமிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

'சிவனொளிபாதம் புத்தரின் பாதமானது'

உடன் நடவடிக்கை எடுக்க சைவ மகா சபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிவனொளிபாதம் என பொறிக்கப்பட்டிருந்த பெயர் பலகை தற்போது ஸ்ரீ புத்தரின் பாதம் எனப் பொறிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமைக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ள அகில இலங்கை சைவ மகாசபை இவ்விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்தச் சபை அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில்,

பன்னெடுங்காலமாக சைவத் தமிழர்களால் சிவனொளிபாத மலையாக போற்றி வழிபடப்பட்ட இறை சிவனின் பாதம் தற்போது தமிழிலும் ஸ்ரீ புத்தரின் பாதம் என பொறிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை சைவ மகாசபை வன்மையாக மறுதலிக்கின்றது.

இராவணன் ஆண்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிலேயே சிவபூமி என அழைக்கப்பட்ட மண்ணில் பிற்காலத்தில் ஒவ்வொருவரும் தம் விருப்புக்கேற்ப பெயர்களை தங்கள் மொழியில் மாற்றிய போதும் சைவத்தமிழர்கள் சகிப்புத்தன்மையுடன் தாங்கிக் கொண்டனர்.

ஆனால் இன்று தமிழ் மொழியிலேயே தமிழர்கள் பல ஆயிரம் வருடங்கள் வழங்கிய ஆதி பெயர் மாற்றப்பட்டு காட்சிக் கல்லில் பொறிக்கப்பட்டு இருப்பது இலங்கைத் தீவில் வாழும் ஒட்டுமொத்த சைவத் தமிழர்களையும் வேதனைக் குள்ளாகியுள்ளது.

எனவே அரசு உடனடியாக சிவனொளிபாதம் என சரிவரப் பொறிக்க ஆவன செய்ய வேண்டும் என சைவ மகாசபை வேண்டுவதுடன் இந்து கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தேசிய சகவாழ்வு மற்றும் மொழிக் கொள்கை அமைச்சர் மனோ கணேசன் ஆகியோர் தங்கள் அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்தி உடனடியாக சைவத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிக்குத் தீர்வை வழங்க வேண்டும் எனவும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்

அச்சுவினி, பரணி

மாலை 4.30 மணிக்கு

விருச்-சந்

		புத, ராகு
செவ், கேது		சூரி
சனி		குரு, சந் / சுக்

18.08.2018

ஆவணி 02, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

சப்தமி காலை 6.13 மணிவரை

விசாகம் முன்னிரவு 10.42 மணிவரை

சுபநேரம் 3.05-4.35 மணிவரை

இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

வளவன்

மீனம்

எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை, கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

மேடம்

விருப்பங்கள் நிறைவேறும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

இடம்

தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

மிதுனம்

தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

கும்பம்

தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

கடகம்

தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், சுப செலவுகள் கூடும்.

மகரம்

உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

சிம்மம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், உஷ்ணசம்பந்தமான ரோக பயமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

தனுசு

பெரிய மனிதர்களின் சந்திப்பு கிடைத்து மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

விருச்சிகம்

வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சேமிப்பு உயரும் நாள்.

துலாம்

காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

கன்னி

வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கொடியேற்றத்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கலைஞர்களின் தகவல் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கலைஞர்களின் தரவுத் தளத்தை இணையத்தளத்தில் அறிமுகப்படுத்தும் பொருட்டு உடுவில் பிரதேச செயலகத்தில் அவர்களுக்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் சமர்ப்பிக்குமாறு உடுவில் பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-105)

இரத்த சுத்திகரிப்பு நிலையம் திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட இரத்த சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்னவால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவும்,சிறப்பு விருந்தினராக சுகாதார பிரதி அமைச்சர் பைசல். கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான , எம்.கே. சிவாஜிலிங்கம், கே.சயந்தன் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை, சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் வாமதேவன்,சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரி விக்கிரம சிங்க மற்றும் வைத்திய அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர். இரத்த சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்த சுகாதார அமைச்சர் அங்கு புதிதாக பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களையும். நோயாளர்களையும் பார்வையிட்டார். இரத்த சுத்திகரிப்பு நிலையத்தை திறப்பதற்கு முன்னதாக சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் முன்பாக அமைந்துள்ள மாமனிதர் ரவிராஜின் உருவச்சிலைக்கு சுகாதார அமைச்சர் ராஜித மலர் தூவி அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ-30-89)

பட்டமளிப்பிற்குரிய விண்ணப்பங்களை சமர்ப்பியுங்கள்

2017 ஆம் கல்வியாண்டில்முழுமையாக கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த அனைத்து கற்கைநெறிகள் சார்ந்த மாணவர்கள் அனைவரும் 16/08/2018 தொடக்கம் 10/09/2018 இற்கு முன் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு உரிய ஆவணத்தினை பெற்று உரிய காலக்கிரமத்தில் பட்டமளிப்பு விழாவிற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவன உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் அறிவித்துள்ளார். (இ)

புலோலி புற்றளை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக அமெரிக்க கணனி மென்பொருள் உற்பத்தி நிறுவனப் பணிப்பாளரும் பொறியியலாளருமான கே. காந்தரூபன் கலந்து கொண்டு உரையாற்றினார். பரிசில்களை வைத்திய கலாநிதி திருமதி அகிலா காந்தரூபன் வழங்கினார்.

நல்லைக்குமரன் மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் நல்லைக்குமரன் மலர் - 2018 வெளியீட்டு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாநகரசபை ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்பு நடனத்தினை யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்குவதுடன் வரவேற்புரையை யாழ்.மாநகரசபை செயலாளரும் சைவசமய விவகாரக்குழு உறுப்பினருமான அ.சீராளன் நிகழ்த்தவுள்ளார். அதனை தொடர்ந்து ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குருபீடாதிபதி சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் , யாழ். சின்மயாமிஷின் வதிவிட ஆச்சாரியார் சுவாமி சிதாகாசானந்தா, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர் மற்றும் பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து, சந்நிதியான் ஆச்சிரம சிவத்திரு. செந்தில்வேல் மோகனதாஸ் சுவாமிகளுக்கு யாழ்.விருது மற்றும் பொற்கிழி வழங்கி கௌரவிப்பும் இடம்பெறும். பின்னர் மலர் வெளியீட்டு ரையையும் வெளியீட்டையும் மலரின் பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்துவார். முதற்பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக் கொள்வர்.

ஆய்வுரையை பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஓய்வுநிலை அதிபர் சோ. பத்மநாதன் நிகழ்த்துவரர். தொடர்ந்து விசேட பிரதிகள் வழங்கப்படுவதுடன் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். நன்றியுரையினை சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர் பு.ஆறுமுகதாசன் நிகழ்த்துவார். (இ-9)

கருவியின் கொடித் திங்கள்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகள் சமூக வள நிலையத்தின் கொடித் திங்கள் 2018 நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள சின்மயா மிஷனில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை இக்கொடி தினம் அனுஷ்டிக்கப்படும். (இ-7)

காகித உற்பத்தி ஆலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வடக்கின் முதலாவது காகித உற்பத்தி ஆலையின் திருப்பு விழா எதிர்வரும்22 ஆம்திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ)

கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஞானவைரவர் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறவுள்ளது. (இ)

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் இ.மு.வீ. நாகநாதனின் நினைவு தினம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடமாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், மாகாணசபை உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

சப்ரகமுவ மாகாணத்தின் பதில் ஆளுநராக கூரே



(கொழும்பு)

சப்ரகமுவ மாகாணத் தின் பதில் ஆளுநராக ரெஜி னோல்ட் கூரே நியமிக்க ப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளு நர் நிலுக்க ஏக்கநாயக்க, இத்தாலிக் கான விஜயம் ஒன்றை மேற்கொ ள்ளவுள் ளதால் அவர் இலங்கை யில் இல்லாத நாட்களில் சப்ரகமுவ மாகாணத்தின் பதில் ஆளுநராக ரெஜினோ ல்ட் கூரே செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 20 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 28 ஆம் திகதி வரைசப்ரகமுவ மாகாண ஆளுநர் நிலுக்க ஏக்க நாய க்க இத்தாலிக்கான விஜய த்தை மேற்கொள்ளவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

யாழில் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தனின் உற்சவத்தை முன்னிட்டு பூபாலசிங்கம் புத்தகசாலை பாரிய அளவிலான புத்தக கண்காட்சி ஒன்றை முன் னெடுக்கவுள்ளது. யாழில் உள்ள பரந்த அளவிலான வாசகர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு வாசிப்பு ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டும் தமிழ்பேசும் நல்லுலகின் நாவல்கள், இலக்கியங்கள், ஆன்மீகம், புதினங்கள், கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் என அத்தனை விதமான தலைப்புக்களிலும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகக் குவி யல்களை விலைக்கழிவுகளில் வழங்கவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரையிலுமாக தினமும் காலை 9 மணியிலிருந்து நல்லூர் பூபாலசிங்கம் புத்தகசாலை வளாகத்தில் இக் கண்காட்சி இடம் பெறும். (இ)

நடமாடும் மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகத்தினால் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை கோண்டாவில் ஞானவீரா சனசமூக நிலையத்தில் மாபெரும் நடமாடும் மருத்துவமுகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமுகாமில் நீரிழிவுப்பரிசோதனை மற்றும் உயர் குரு தியமுத்தப் பரிசோதனை இடம்பெறும். எனவே இந்த மருத்துவ முகா மில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

மழலைகளை மகிழ்வூட்டும் விழா

(யாழ்ப்பாணம்)

அண்ணாசிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத்தின் வள் ளுவர் முன்பள்ளியின் ஏற்பாட்டில் மழலைகளை மகிழ்வூட்டும் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி க்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி பொறுப்பாளர் க.இரத்தினம் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் வே.சிவ யோகன் கலந்து கொள்வார். (இ-7-60)



வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம்
பிராயச்சித்த அபிஷேக பாலஸ்தாபன கும்பாபிஷேக
விஞ்ஞாபனம்- 27.08.2018 திங்கட்கிழமை

வைரவப்பெருமானின் மெய்யடியார்களே!

ஸ்வஸ்திஸ்ரீ விளம்பி வருஷம் ஆவணி மாதம் 11 ஆம் நாள் 27.08.2018 திங்கட் கிழமை பிரதமை திதியும், சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப வேளையில் ஞான வைரவப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் பிராயச் சித்த அபிஷேகம் நடைபெறவும் மேற்படி ஆலய புனருத்தாரண திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி நடைபெறவும் ஞான வைரவப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது.

ஞான வைரவப் பெருமான் அடியார்கள் யாவரும் வருகைதந்து அபிஷேக பூசை நிகழ்வுகளைக் கண்டு இஷ்ட சித்திகளைப் பெற்று திருப்பணி கைங்கரியங்க ளில் பங்கெடுத்தும் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று அன்புடன் அழைக்கின்றோம்.

பாலஸ்தாபன பிரதம குரு
சிவஸ்ரீ.இ.ரமணிதரக் குருக்கள்
ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ.இ.இராமலிங்கசர்மா

27.08.2018 திங்கள் காலை 9.00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும்.
அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

(5303

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினர்.

புரவு பெருமக்கள் விருது விழா- 2018

தேசத்தின் உயர்ந்த வரி செலுத்தும் புரவு பெருமக்களைக் கௌரவித்து சிறப்புரிமை அட்டை வழங்கும் இவ்வைபவத்தில் தாங்க ளும் கலந்து சிறப்பித்து இரவு விருந்துப சாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விழா நடைபெறும் இடம்
"செல்வா பலஸ்"
இல.10,12, பூநாறி மரத்தடி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.
காலம்: 18.08.2018
சனிக்கிழமை மாலை 4.00
மணிமுதல்

ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்,
உள்நாட்டு இறைவரி திணைக்களம்,
பிராந்திய அலுவலகம்-யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.021 222 2076

(இ)

V CHILLI POWDER
மிளகாய்த்தூள்

சுத்தமான முறையில் தரமாக யாழ்ப்பாண பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட மிளகாய்த்தூள்.

சைவ, அசைவ உணவுகளுக்கு ஏற்றபடி
தயாரித்துக் கொடுக்கப்படும்.

Home Delivery Available

வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் பிரத்தியேகமாக பொதி செய்தும் கொடுக்கப்படும்.

விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய்.
V Darling Sweets
TP No:- 077 944 7977,
077 508 4685

அகவை அறுபதில் ஆசிரியைக்கு நல்வாழ்த்துக்கள்

திருமதி
இரத்தினேஸ்வரி தங்கராசா
(B.A.P.G.D.E., S.L.T.S-I)

சேவை விபரம்

யா/ எழுதுமட்டுவாழ் சி.சி.த.க.பாடசாலை- 08.06.1978-31.10.1978
யா/ எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை- 01.11.1978-04.05.1982
யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை- 05.05.1982-31.12.1983
வ/செட்டிகுளம் மகா வித்தியாலயம்-01.01.1984-14.06.1987
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி- 15.06.1987-14.06.1990
யா/ எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை- 15.06.1990-31.12.2006
யா/வல்வை சிதம்பராக் கல்லூரி- 01.01.2007-31.08.2014
யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்- 01.09.2014-17.08.2018

எமது பாடசாலையில் நல்லாசிரியராகக் கடமையாற்றி இன்று ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5371)

உசன் மிருசுவில்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் வழிபட அனுமதி; மாற்றங்கள் செய்ய தொல்லியல் திணைக்களம் தடை

(பனிக்கன்குளம்)

வவுனியா வடக்கு வெடுக்கு நாறி ஆதிசிவன் ஆலயத்தில் வழி பாடு செய்ய அனுமதி வழங்கப் பட்டுள்ளதுடன் ஆலயத்தில் மாற்ற ங்கள் செய்ய தொல்லியல் திணை க்களம் தடை விதித்துள்ளது.

வவுனியா வடக்கு நெடுங் கேணியில் உள்ள வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்திற்குச் செல்வத ற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. எனினும், ஆலய த்தில் மாற்றங்களை செய்யவோ, கட்டடங்களை அமைக்கவோ முடியாதென தொல்லியல் திணை க்களம் தெரிவித்துள்ளது.

நெடுங்கேணி, ஒலுமடு பகுதி யில் உள்ள வெடுக்குநாறி மலை மீது ஆதிசிவன் ஆலயம் அமைந் துள்ளது. இதனை மக்கள் காலங் காலமாக வழிபட்டு வருகின்ற நிலையில், அது தொல்லியல் திணைக்களத்திற்குச் சொந்தமான தென அத்திணைக்களம் தெரிவித் துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி இந்த ஆலயத்தை சேர்ந்தவர்களை நெடு ங்கேணி பொலிஸார் அழைத்து விசாரணைக்கு உட்படுத்தியிரு ந்தனர்.

இதன்போது, ஆலயத்திற்குச் செல்ல வேண்டாமென்றும் மீறிச் சென்றால் நடவடிக்கை எடுக்கப்ப டும் என்றும் குறிப்பிட்டனர். எனி னும், அதற்கு மறு நாள் ஆடி அமா வாசை திதி என்பதால் தொல்லியல் திணைக்களம் மற்றும் பொலி ஸாரின் அனுமதியுடன் மக்கள் அங்கு சென்று பூஜை வழிபாடு களை மேற்கொண்டனர்.

இந்நிலையில், மீண்டும் ஆலய நிர்வாகத்தினரை பொலிஸ் நிலை யத்திற்கு அழைத்த பொலிஸார், ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள தடையில்லையெ னத் தெரிவித்தனர்.

ஆனால் ஆலயத்தில் மாற்ற ங்கள் செய்தல், கட்டடங்களை அமைத்தல் உள்ளிட்ட எந்த நட வடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது எனத் தெரிவித்துள்ள னர். (2-281)

35 கிலோ மரை இறைச்சியுடன் வவுனியாவில் இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, மாவட்டத்தில் நெளுக்குளம் பகுதியில் 35 கிலோ மரை இறைச்சியுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவு னியா பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

பட்டா ரக வாகனத்தில் நேற்று இறைச்சியை எடுத்துச் செல்லப்ப ட்ட போதே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா போதை ஒழிப்பு பிரிவினருடன், வவுனியா புலனா ய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவல் அடிப்படையில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்லுவராச்சி அவர் களின் வழி நடத்தலில் எஸ். ஐ.உசாந்த தலை மையில் சென்ற குழு வினர் நெளுக்குளம் பகுதியில் வைத்து பட்டா ரக வாகனத்தை வழிமறித்து சோதனை மேற்கொண்டனர்.

பழுதடைந்த உண வுகளுக்குள் மறைத்து பக்கட் ஒன்றில் பொதி செய்யப்பட்டு கிடாச்சூரி யிலிருந்து வவுனியா விற்கு எடுத்துச் செல் லப்பட்ட 35 கிலோ கிராம் மரை இறைச்சி யைக் கைப்பற்றியுள் ளதுடன், அதனை கொண்டு சென்ற 39 மற்றும் 19 வயதுக ளைக்கொண்ட தோணி க்கல் பகுதியைச் சேர் ந்த இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ள னர்.

வவுனியா பொலிஸ் நிலைய த்தைச் சேர்ந்த பொலிஸ் குழுவி னரே இதனைக் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட மரை இறைச் சியும் பட்டா ரக சாரதியும் உதவியா ளரும் மேலதிக விசாரணைகளு க்காக வவுனியா பொலிஸ் நிலை யத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் விசார ணைகளின் பின்னர் நீதிமன்ற த்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

5800 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படும் வவுனியா பேராறு குடிநீர்த் திட்டத்தைப் பார்வையிட்டார் ரவூப் ஹக்கீம்

(குருமன்காடு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் மூலம் பேராறு குடிநீர்திட்டத்திற்கும் வேறு திட்ட ங்களுக்குமாக சுமார் 5800 மில் லியன் ரூபாய் நிதியில் ஆரம்பிக் கப்பட்ட பேராறு குடிநீர் திட்டம் முடிவுறும் நகர திட்டமிடல் மற்றும் நிலையில் அதனை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமை ச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன் தினம் நேரில் சென்று பார்வையி ட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்திலே பாரிய குடிநீர் வழங்கும் திட்டமாக ஆரம் பிக்கப்பட்ட பேராறு குடிநீர் திட் டமானது நடைமுறைப்படுத்தப்படு கிறது. இப் பிரதேசத்தின் விவசா யிகளின் வேண்டுகோளுக்கமைய நீர்த்தேக்கத்தில் இருந்து செல்லும் மேலதிகமான நீரானது 15 இற்கும் மேற்பட்ட குளங்களில் நீர் செல்லக்கூடிய வகையில் கலிங்கு அமைத்து கொடுப்பதற்கும் இதன் போது இணக்கம் காணப்பட்டுள் ளது.

இதனால் பல விவசாயக் குடும் பங்கள் இரண்டு போக நெற்பயிர்ச் செய்கை செய்யக்கூடிய வாய்ப் புக்கிட்டியுள்ளது. அத்துடன், இப் பிரதேசமக்களுக்கு சுத்திகரிக்கப்ப ட்ட குடிநீர் வழங்குவதற்குரிய நட வடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சருடன் வன்னிப் பாரா ளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர்களான ஹுனைஸ் பாருக், முத்தலிப் பாவா பாருக், பிரதேச சபை உறுப்பினர் மாஹிர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடக்கு மாகாண பொது முகாமையாளர் பாரதிதாசன் உள் ளிட்ட பலரும் நேரில் சென்று பார் வையிட்டனர். (2-250)

குடியிருப்புக்களை ஊடறுத்துப்போடப்பட்ட மண் அணைகளை அகற்றாமையால் சிரமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் பகுதியில் யுத்தகாலத் தில் பொதுமக்களின் குடியிருப்புக் களை ஊடறுத்து போடப்பட்ட மண் அணைகள் இதுவரை அகற்றப் படாமையினால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பாதிக்கப்பட்டமக்கள் தெரிவித்து ள்ளனர்.

தேராவில் பகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தகாலத் தில் பொதுமக்களின் குடியிருப்புக் காணிகளை ஊடறுத்து போடப்ப ட்ட மண் அணைகள் இதுவரை யில் அகற்றப்படாத நிலையில் காணப்படுகின்றன.

மக்கள் மீள்குடியேறி எட்டு ஆண்டுகள் கடந்த போதும் இது வரை குறித்த மண் அணைகள் அகற்றப்படாமல் காணப்படுவதா கவும் இதனால் தாங்கள் தங்கள் காணிகளில் பயிர்ச் செய்கைகள் எதனையும் மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரி வித்துள்ளதுடன் குறித்த மண் அணைகள் மற்றும் அதில் காணப் படும் கைவிடப்பட்ட காவலரண் கள் என்பவற்றில் வெடிபொருட்கள் காணப்படலாம் என்ற அச்சம் காணப்படுவதாகவும் தெரிவித்துள் ளனர்.

முல்லைத்தீவு விசுவமடு குள த்தின் அணைக்கட்டில் இருந்து உடையார்கட்டு அணைக்கட்டு வரைக்குமான பகுதிகளில் குறித்த பாரிய மண் அணை காணப்படுவ தாகவும் தெரிவித்துள்ள பிரதேச மக்கள் தமது காணிகளை ஊடறுத் துச் செல்லும் மண் அணைகளை அகற்றித்தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (2-315)

உப்புக்குளத்தின் வான்பகுதியை தனிநபர் அத்துமீறி ஆக்கிரமிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் புன்னைநீராவி உப்புக்குளத்தின் மேலதிக நீர் வெளியேறி வான் பகுதியை தனியார் ஒருவர் அத்து மீறி அபகரித்துள்ளமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவ தாக புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தினால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புன்னைநீராவி கிராமத்தின் உப்புக்குளத்தின் வான்பகுதியூடாக வெளியேறும் மேலதிக நீரைவெளியேற்றும் பொருட்டு அனர்த்த குறைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கழிவு வாய்க்கால்கள் அமைக்கும் பணி கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

இந் நிலையில் உப்புக்குளத் தின் மேலதக நீர் வெளியேறும் வான்பகுதியையும் அதனை அண் மித்த பகுதியையும் தனிநபர் ஒரு வர் ஆக்கிரமித்து வேலி அமைக் கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள நிலையில் இது தொடர்பில் பிரதேச மக்கள் கிராம அலுவலர். ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் கவனத் திற்கு கொண்டு வந்தனர்.

இந்நிலையில் இவ்வாறு காணி அபகரிப்பது தொடர்பாக கிராம அலுவலர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு இது தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்திலும் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்விடயம் தொடர்பில் புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தரிடம் வினவிய போது, கடந்த 2016ஆம் ஆண்டில் 1.9 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக் குளத்தின் வான்பகுதியை தனியார் ஒருவர் ஆக்கிரமித்துள்ளது தொடர் பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பகுதியை கண்டாவளைப்பிரதேச செயலக த்தின் உதவிப்பிரதேச செயலாளர் மற்றும் காணி உத்தியோகத்தர் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (2-315)

மொழி, கலை, கலாசார, பண்பாட்டை மேம்படுத்த வவு. நகரசபை முயற்சி

(வவுனியா)

வவுனியாவில் மொழி, கலை, கலாசார, பண்பாட்டு மேம்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்வதற்கான முயற்சிகளை வவுனியா நகரசபையின் நகரபிதா இராசலிங்கம் கௌதமன் மேற்கொண்டு வருகின்றார்.

இதற்காமைவாக வவுனியாவில் இயங்கிவரும் மொழி, கலை, கலாசார, பண்பாடு தொடர்பான பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களைச் சந்தித்து உரையாடி வருவதுடன் வவுனியா நகரசபைப் பிரதேசத்தில் இயங்கிவரும் பதிவு செய்யப்பட்ட 17 அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இவ் வமைப்புகளைத் தினசரி ஒவ்வொரு அமைப்புக்களாக தனித்தனியாகச் சந்தித்து வருகின்றார். கடந்த 7 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் 11 மணிவரை இச்சந்திப்பு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

வவுனியா தமிழ்ச் சங்கம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், தமிழ் மாமன்றம், கலைதொடர்பு மையம், திரைக் கலைஞர்கள் சங்கம் ஆகிய அமைப்புக்களை சந்தித்துள்ள நகர பிதா தொடர்ந்து தினசரி ஏனைய அமைப்புகளையும் சந்தித்து வருகின்றார்.

இச்சந்திப்பில் இவ்வமைப்புகளின் செயற்பாடுகள் பற்றி ஆர்வமுடன் கேட்டறிகின்றார். வவுனியாவில் மொழி, கலை, கலாசார, பண்பாடு தொடர்பான இப்போதுள்ள நிலை எவ்வாறுள்ளது என்பது தொடர்பான அமைப்புக்களின் கருத்துக்களை பதிவு செய்து கொள்வதோடு, இவற்றை மேலும் மேம்பாடடையச் செய்வதற்கான ஆலோசனைகளையும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.

அனைத்து அமைப்பினரும் ஒன்றிணைந்து மொழி, கலை, கலாசார, பண்பாடு தொடர்பான வளர்ச்சிப் போக்கை முன்னெடுத்துச் செல்வதற்கு முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை இவ்வமைப்புகளுக்கு நகர பிதா விடுத்துள்ளார்.

இச்சந்திப்புகளில் கலந்து கொள்ளும் அமைப்புக்கள் தமது பூரண ஆதரவை வழங்கி வருவதோடு, சந்திப்பு தொடர்பான பூரண திருப்தியையும் தெரிவித்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து விளையாட்டுக் கழகங்கள், சிறுவர் இல்லங்கள், பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி ஆகிய இடங்களில் இயங்கும் மன்றங்கள், விவசாய அமைப்புகள் ஆகியவற்றையும் தொடர்ந்து சந்திப்பதற்கான ஏற்பாடுகளை தொடர்ந்து செய்து வருவதாக நகரபிதா தெரிவித்துள்ளார். (2)

நாயாறில் வாடிகள் தீக்கிரை; கொடூரே சம்பவத்தை நீயாயப்படுத்த முடியாது

வன்மையாகக் கண்டிக்கிறது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவின் கடற் பிரதேசத்தில் வெளி மாவட்ட மீனவர்கள் பெருந்தொகையில் வாடிகளை அமைத்து தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அதேவேளை தடை செய்யப்பட்ட மீன்பிடி வழி முறைகளைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துகிறார்கள்.

இந்நிலையில் அண்மையில் நாயாறுப் பகுதியில் எட்டு வாடிகள், மூன்று மீன் பிடி படகுகள், 27 வலைகள், ஏனைய உபகரணங்கள் என்பன தீவைத்து நாசமாக்கியுள்ளனர். இச்சம்பவத்தை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியற்குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மீனவர்களின் நியாயமான கோரிக்கைகளையும் வெகுஜனப் போராட்டத்தினையும் ஆதரிக்கிறது.

நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் வடக்கின் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியும் சுயீட்சமும் வழங்கப் போவதாகக் கூறி அடிக்கடி அங்கு வந்துசெல்கின்றனர்.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தைக் குறிவைத்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் இடம்பெறுவதற்கும் அத்துமீறிய வெளிமாவட்ட மீனவர்களின் வருகைக்கும் சட்டவிரோத மீன்பிடிக்கும் பச்சைக்கொடி காட்டி வருகிறார்கள்.

இதுதான் இன்றைய நல்லாட்சி அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாடாகும். வாய்ச் சொல்லில் நல்லிணக்கமும் செயற்பாட்டில் பேரினவாதமும் முன்னெடுக்கப்படும் போது வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் எவ்வாறு கடந்தகால இழப்புக்கள் அழிவுகளிலிருந்து மீளமுடியும் என்ற கேள்வியே எழுந்துள்ளது.

எனவே முல்லைத்தீவின் மீனவ மக்களின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க, அவர்கள் முன்னெடுத்துவரும் வெகுஜனப் போராட்டமே ஒரே வழியாகும்.

அதனை எமது கட்சி பூரணமாக ஆதரிப்பதுடன் சகல முற்போக்கு, ஜனநாயக, சக்திகளும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது என அதில் தெரிக்கப்பட்டுள்ளது. (2)

மரம் சரிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து தடைப்பட்டது

(பளிக்கன்குளம்)

வவுனியா சுற்றுவட்ட வீதியில் நேற்று அதிகாலை மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் பல மணிநேரமாக இவ் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

அத்துடன் மின்சார வயர்களும் அறுந்து தொங்கிய நிலையில் காணப்பட்டது.

சுற்றுவட்ட வீதியில் நின்ற பழைமைவாய்ந்த மரமொன்று அதிகாலை வேளை வீதியில் சரிந்து வீழ்ந்துள்ளது. இதன் காரணமாக சுற்றுவட்ட வீதியூடான போக்குவரத்து பல மணிநேரமாக தடைப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் அவர்கள் கவனம் செலுத்தவில்லையெனவும் இதனால் இவ் வீதியூடாகப் பணிக்குச் சென்ற உத்தியோகத்தர்கள் வவுனியா நகருக்குச் சென்று அதன் ஊடாகவே செல்ல வேண்டியுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த இடத்திற்கு விரைந்த இலங்கை மின்சார சபையினர் மின்சாரத்தை துண்டிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு வயர்களை சீர் செய்தனர். (2-281-250)

கலாசார மண்டபத் திறப்பு விழா

(மன்னார்)

மன்னார் திருக்கேதீச்சரம் அம்மை அப்பன் இல்ல கலாசார மண்டபத் திறப்பு விழா இன்று 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.15 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இல்லத்தலைவரும் ஓய்வு பெற்ற அரசாங்க அதிபருமான வே. விசுவலிங்கம் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன் போது திருக்கேதீச்சரம் சிவன் அருள் இல்லம் மாணவர்களின் பண்ணிசையும் "இறைபக்தியும் வாழ்வியலும்" எனும் தலைப்பில் ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி. நிர்மலா பத்மநாதனின் அருரையும் இடம் பெறும்.

அத்துடன் கதாப்பிரசங்கம் நடைபெறும். (2-9)

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவச கணனி வகுப்புக்கள்

(கிளிநொச்சி)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் சுமார் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் இலவச கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது. நியூசிலாந்தில் இயங்கிவரும் வன்னி நேயம் அமைப்பின் நிதிப்பங்களிப்பில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த கணனி வகுப்புகள் போரில் பாதிக்கப்பட்டுநலிவடைந்த குடும்பங்களாதார சூழலில் வாழும் மாணவர்களுக்கு இலவசமாக நடத்தப்படவுள்ளது. (2)

வாகன தரிப்பிடத்தில் போலி பற்றுச்சீட்டுக்கள் விநியோகம்

வவுனியா நகரசபையில் முறைப்பாடு

(பளிக்கன்குளம்)

வவுனியா புகையிரத வீதியில் வங்கிகளுக்கு முன்பாக அமைந்துள்ள வாகனத்தரிப்பிடத்தில் போலி பற்றுச்சீட்டுக்கள் விநியோகம் இடம் பெறுவதாக வவுனியா நகரசபையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா புகையிரத வீதி வங்கிகளுக்கு முன்பாக அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கு சிறியரக வாகனத்திற்கு 30 ரூபாவும், கனரக வாகனத்திற்கு 50 ரூபாவும் அறவிடப்படுவது வழமையாகும்.

இதன் குத்தகை வவுனியா நகரசபையினரால் வவுனியா வர்த்தக சங்கத்தினருக்கு வழங்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக அங்கு பணிபுரியும் உத்தியோகத்தர் சிறியரக வாகனத்திற்கு 50 ரூபா அறவிடுவதாகவும் அப்பற்றுச் சீட்டில் முத்திரை எவையும் காணப்படுவதில்லை என்றும் சில சமயங்களில் சிறியரக வாகனத்திற்கு 30 ரூபா (முத்திரை பதித்த) பற்றுச் சீட்டை விநியோகிப்பதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகரசபையின் தலைவர் இராசலிங்கம் கௌதமனை வினவிய போது,

குறித்த வாகன தரிப்பிடத்தின் குத்தகை வவுனியா வர்த்தக சங்கத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பாக அவர்களிடம் வினவுவதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா வர்த்தக சங்க தலைவர் எஸ். சுஜன் வினவிய போது,

சிறிய வாகனத்திற்கு 30 ரூபாவும், பெரிய வாகனங்களுக்கு 50 ரூபாவும் அறவிடப்படுகின்றது.

இவ் விடயம் தொடர்பாக ஏற்கனவே முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த ஊழியர் மீது விசாரணை நடத்தப்படும் எனத் தெரிவித்தார். (2-281-250)

பாலிநகர் பாடசாலைக்கு முன்பாகவுள்ள படை முகாம் அகற்றப்பட வேண்டும்

அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் ரவிகரன் கோரிக்கை

(பளிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மு/பாலிநகர் மகாவித்தியாலயத்திற்கு முன்பாவுள்ள படை முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேச சபை அபிவிருத்திக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன் போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், மு/பாலிநகர் மகாவித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள படையினரின் முகாமினால் பாடசாலைமாணவர்களுக்கு உளரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் ஒழுங்காக உளத்தாக்கத்திற்கு உள்ளாகாமல் கல்வி கற்பதற்கான சூழல் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் ஏற்படுத்தப்படவில்லை.

இதற்கு முன்னர் நடைபெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கு அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் அமைச்சர் றிசாத் பதியுதீன் பதிலளிக்கையில், இந்த படை முகாம் தொடர்பில் பிரதேச செயலாளரால் படைத்தரப்பிடம் கேட்கப்பட்டபோது அந்த படை முகாம் சட்டரீதியாகவே அமைக்கப்பட்டுள்ளது என்று படையினர் தெரிவித்துள்ளனர்.

அதனால் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்திற்கு இந்த விடயத்தை மாற்றக் கோரி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் படைத்தரப்பினரையும் அழைத்து இதுபற்றி கதைக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

புகையிரதத்தில் மோதுண்டு இரு மாடுகள் உயிரிழந்தன

(பளிக்கன்குளம்)

வவுனியா பறநாட்டன்கல் பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு இரண்டு மாடுகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. பறநாட்டன்கல் புகையிரதக் கடவைக்கு அருகாமையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் முற்பகல் 10.30 மணியளவில் மோதுண்டு இரு நாம்பன் மாடுகள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தன.

இவ் விபத்தின் காரணமாக 20 நிமிடங்கள் தாமதித்தே புகையிரதம் பயணித்ததாக சம்பவ இடத்தில் நின்ற பொதுமக்கள் தெரிவித்தனர். (2-281-60)

மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

அதிவேகமாக சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று பெண் ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளானதில் குறித்த பெண்ணும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபரும் உயிரிழந்துள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாதம்பை - குளியாப்பிட்டிய வீதியில் பெலவத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

பெரும் தலைவரை இந்தியா இழந்து விட்டது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த இரங்கல்

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மறைவிற்கு முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார்.

அடல் பிகாரி வாஜ்பாய் தனது 93 ஆவது வயதில் டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் காலமானார்.

அவரது மறைவுக்கு ஜனாதிபதி, பிரதமர், மாநில முதல்வர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், கலை உலக பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷவும் தனது டுவிட்டரில் இரங்கல் செய்தியை தெரிவித்துள்ளார்.

"முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் என்னும் பெரும் தலைவரை இந்தியா இழந்து விட்டது. இந்திய மக்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன்" என அவரது டுவிட்டரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

இந்தியப் பிரஜை கைது

(கொழும்பு)

விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் கிதுலம்பிட்டிய பகுதியில் வைத்து இந்தியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய இந்தியப் பிரஜையான இவர் கிதுலம்பிட்டிய பகுதியில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த இளைஞனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

மாநகர சபையின் உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஜே.வி.பி.எதிர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர்களின் சம்பளத்தை 25,000 ரூபாயால் அதிகரிக்க மாநகர மேயர் ரோஸி சேனநாயக்க எடுத்துள்ள தீர்மானத்துக்கு, மக்கள் விடுதலை முன்னணி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

மேயரின் குறித்த யோசனை எதிர்வரும் பொதுக்கூட்டத்தின் போது தோற்கடிக்கப்படும் என, மக்கள் விடுதலை முன்னணியின் மாநகர சபை உறுப்பினர் ஹேமந்த வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையில் அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் 6 பேரும் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக, அவர் தெரிவித்தார்.

மாநகர சபை உறுப்பினர்களின் சம்பளம் மேற்குறிப்பிட்டவாறு அதிகரிக்கப்பட்டால், மக்களிடமிருந்து பெறப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக, 1,428 இலட்சம்ரூபாய்செலவிடவேண்டி ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

சமையல் எரிவாயுவுக்கான விலைச்சூத்திரம் அறிமுகம்

(கொழும்பு)

சமையல்எரிவாயு விலை தொடர்பில் விலை சூத்திரமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு, அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபையே, இந்த சூத்திரத்தை தற்போது தயாரித்து வருகின்றதென, வாழ்க்கைச்செலவுக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்த விலைச்சூத்திரத்தை அமுல்படுத்தினால், உலக சந்தையில்சமையல்எரிவாயுவின் விலை குறைவடையும் போது, உள் நாட்டிலும் சமையல் எரிவாயுவின் விலைகுறைவடையும்என்றும் அந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு, சமையல்எரிவாயு நிறுவனங்கள் விடுத்திருந்த கோரிக்கையை ஆராய்ந்தன் பின்னரே, சமையல் எரிவாயுவுக்கும் விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வாழ்க்கைச் செலவு குழு அறிவித்துள்ளது.(இ-7)

எல்லை வரம்பு அறிக்கையை இந்த மாதம் அங்கீகரித்தால் தான்

ஜனவரியில் தேர்தல்

(கொழும்பு)

எல்லை வரம்பு அறிக்கையை நாடாளுமன்றம் இந்த மாதம் அங்கீகரித்தால் ஆறுமாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் 2019 ஜனவரி மாதம் நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் தொகுதிகள் தொடர்பான எல்லை வரம்பு அறிக்கை எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்த நிலையிலேயே மகிந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

சிறைச்சாலையில் பொலிஸ் பிரிவு நிறுவப்பட்டுள்ளது

நீதி அமைச்சர் தலதா தகவல்

(கொழும்பு)

சிறைச்சாலையில், சிறைச்சாலை பொலிஸ் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளதாக, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது சிறைச்சாலையிலுள்ள புலனாய்வுப் பிரிவின் நிலை என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தற்போது புலனாய்வுப் பிரிவு எனும் பிரிவு கிடையாது. தற்போது சிறைச்சாலை பொலிஸ் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. சிறைச்சாலை நடவடிக்கை தொடர்பில், அதனை சட்ட பூர்வமான ஒரு அலகாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என தெரிவித்தார்.

"சிறைச்சாலை வரலாற்றில் இப்பிரிவு அமைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும் எனத் தெரிவித்த அமைச்சர், சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு கடந்த 2010 இல் நிறுவப்பட்டது. 8 வருடங்கள் வரை, அவர்கள் மேற்கொள்ளும் திடீர் சோதனைகள் தொடர்பில் யாரும் பொறுப்புடையவர்களாக இருக்கவில்லை. இதன் காரணமாக, உயர் அதிகாரிகளின் தேவைக் கேற்ப அல்லது சுற்றியுள்ள அரசியல்வாதிகளின் தேவைக் கேற்ப அது நிறுத்தப்பட்டது. அது தவறு, சிறைச்சாலையினுள் அதிகாரிகளாக செயற்படுவோர், சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் ஏனெனில், சிறைச் சாலையில் இருப்போர், சமூகத்தில் சாதாரண சூழலில் வாழ்வோரல்ல. அவர்கள் மனதளவிலான உணர்வுகளைக் கொண்ட ஏனையோரைப் போன்று உரிமைகளை ஒரேயளவில் பெறும் பிரிவினராக்கப்பட வேண்டும்" என்றார்.

கூரையின் மீதேறி போராட்டம் புரிந்தவர்கள் தொடர்பான சிறைச்சாலை பிரச்சினைகள் முடிந்து விட்டனவா என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அவ்வாறான ஒரு பிரச்சினை இருந்ததா என கேள்வி எழுப்பினார்.

மேலும் தெரிவித்த அவர், கூரையின் மீதேறி, தங்களுக்கு அவசியமானவற்றை கேட்க முனைந்துள்ளனர். இன்று, அவர்கள் அவ்வாறான கோரிக்கைகளை முன்வைக்கும் சுதந்திரம் அவர்களுக்கு காணப்படுகின்றது என்பது தொடர்பில் சந்தோசப்படவேண்டியுள்ளது என்றார்.

பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அவர்களை சிறை வைத்திருப்பது, இவற்றை அவர்களுக்குள்ளேயே சிறை வைத்திருக்க வேண்டும் என்பதற்கல்ல என்றார்.

அவர்களுக்கு ஏற்பட்ட தவறுகளை திருத்தி, சிறைச்சாலையினுள் காணப்படும் சூழலின் மூலம் அவர்களிருந்த சூழலை விட வேறு விதமாக மாற்றி, அவர்களை நெறிப்படுத்தும் மையமாக அது மாற வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

அண்மைக்காலமாக, சிறைச்சாலையினுள் இருந்த வாறு பாதாளக்குழுவை செயற்படுத்துவோரின் தேவைக்காக, இயங்கும் போதைப் பொருள் வர்த்தகம் காரணமாக, இந்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில், பாரிய முடிவை எடுக்க நேரிட்டது. இதன் காரணமாக, எனது சில அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் எழ ஆரம்பித்துள்ளது. அவ்வாறான அனைத்திற்கும் முகம் கொடுத்தவாறு, நாம் அமைச்சு மற்றும் திணைக்களமாக முடிவுகளை எடுப்போம் என அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்தார். (இ-7)

வெளிநாட்டிலிருந்து உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள இலங்கை மாணவன் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கை மாணவரொருவர் வெளிநாட்டிலிருந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தோனேசியாவிலிருந்து குறித்த மாணவன் பரீட்சைக்கு தோற்றவுள்ளதுடன், இவ்வாறான சம்பவம் இடம்பெறுவது இதுவே முதல் தடவை என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு - பம்பலப்பிட்டி புனித பீற்றஸ் கல்லூரியில் கல்வி கற்று வரும் அகலங்க பீரிஸ் எனும் மாணவனுக்கே இவ்வாறானதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

ஆசிய விளையாட்டு விழாவிற்காக, இலங்கை நீச்சல் குழாமில் இடம்பிடித்து அந்த மாணவர் இந்தோனேசியா சென்றுள்ள நிலையிலேயே இந்த சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித குறித்த கொழும்பு ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கையில்,

தேசிய ஒலிம்பிக் குழுவின் கோரிக்கையால் இந்த மாணவன் வெளிநாட்டிலிருந்து பரீட்சை எழுதுவதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இந்தோனேசிய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம் பெறவுள்ள இந்த பரீட்சையில் கணக்கியல், பொது அறிவு மற்றும் ஆங்கிலம் ஆகிய 3 பாடங்களினதும் பகுதி ஒன்றுக்கான வினாப் பத்திரங்களுக்கு அகலங்க விடையளிக்கவுள்ளார்.

இதற்காக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் இந்தோனேசியாவிற்கு செல்லவுள்ளனர் எனத் தெரிவித்தார். (இ-7)

சு.க.உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட மாநகர, நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தமது பிரதேச ரீதியான செயற்பாடுகளை வலுவூட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விசேட நிதியினை எதிர்வரும் வாரம் கொழும்பில் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக உறுப்பினர்களுக்கு வழங்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வுக்கான அழைப்பிதழ் கடிதங்களை உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள சுதந்திரக்கட்சி யாழ்.மாவட்ட காரியாலயத்தில் வைத்து உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் இணைப்பாளர் றிஸ்மி நேரடியாக வழங்கினார். (இ-9)

நல்லூர் ஆலயச் சூழலில் தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று பாட்டு சிவநாதன் பிரதீபன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் ம.லோகேந்திரன், கெஞ்சிரா ஞா.வசந், கடம் கு.ரவிசங்கர் ஆகியோர் வழங்குவர். (இ)

சீனாவால் தெற்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் ரயில் பாதை விஸ்தரிப்பு 26 கி.மீ.பூர்த்தி



(கொழும்பு)

சீனாவால் தெற்கில் முன்னெடுக்கப்படும் பாரிய ரயில் பாதை விஸ்தரிப்பு பணிகள் தொடர்வதாகவும், 26 கிலோ மீற்றர் வரையான வேலைத்திட்டம் பூர்த்தியடைந்துள்ளதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

இலங்கையில் சீனாவால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஊடகவியலாளர்களுக்குக் காண்பிக்கும் வகையில் இலங்கையிலுள்ள சீன தூதரகத்தினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வின் போதே சீன அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

"தெற்கில் மாத்தறை மற்றும் பெலியத்த போக்குவரத்து மார்க்கத்திலான ரயில் தண்டவாள நிர்மாணப்பணி சீனா தேசிய இயந்திர இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் 26 கிலோமீற்றர் வரையான நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

அத்தோடு ஒரு கிலோ மீற்றர் நீளமான மேம்பாலத்தையும் சீனாவின் ரயில் பாதை விஸ்தரிப்புத் திட்டம் உள்ளடக்கியுள்ளது.

இதுவே இலங்கையிலுள்ள மிக நீளமான ரயில் பாதை மேம்பாலமாக அமையும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

சு.கவின் மாநாடு செப்.2 இல் இல்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 67ஆவது மாநாட்டை, செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதியன்று நடத்தாமல் விடுவதற்கு, அக்கட்சி தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மாவட்ட மற்றும் தொகுதி சபைகள், இளைஞர் குழு மற்றும் பெண்கள் குழு ஆகியன இன்னும் நிறுவப்படவில்லை என்பதால் அவற்றை நிறுவியதன் பின்னர், சுதந்திரக் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்குக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமையில், இந்த மாநாட்டுக்கான குழு நிறுவப்பட்டுள்ளது. அதன் போதே, மாநாடு நடத்தப்படும் திகதி, இடம் உள்ளிட்ட ஏற்பாடுகள் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதிருக்கும் தற்காலிக அதிகாரிகள் சபையை கலைத்துவிட்டு, புதிய அதிகாரிகள் சபையை நியமிப்பது, கட்சியின் மாநாட்டுக்குப் பின்னர் இடம்பெறுமென கட்சித் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை	இவர்களுக்கு மணமகன் தேவை
பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: உத்தரம் கி.பா: 54 செவ் 7 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்:O/L/வியாபாரம் எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் தொ.இ: B/310	பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: அச்சுவினி கி.பா: 70 உயரம்: 5' தகைமை/தொழில்:A/L/அரச தொழில் தொ.இ: G/513
பிறப்பு: 1974 இந்து நட்சத்திரம்: உத்திரட்டாதி கி.பா: 14 செவ் 2 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில் தொ.இ: B/319	பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: மகம் கி.பா: 18 உயரம்: 5'3" தகைமை/தொழில்:O/L தொ.இ: G/522
பிறப்பு: 1972 இந்து நட்சத்திரம்: கார்த்திகை கி.பா: 17 உயரம்: 5'6" தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் தொ.இ: B/326	பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி கி.பா: 12 உயரம்: 5'1" தகைமை/தொழில்:BA/அரச தொழில் தொ.இ: G/524
பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: திருவாதிரை கி.பா: 43 உயரம்: 5'9" தகைமை/தொழில்:BSc, MSc/ லண்டன் NOT PR தொ.இ: B/328	பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: உத்திரட்டாதி கி.பா: 35 செவ் 7 இல் உயரம்: 155cm தகைமை/தொழில்:O/L தொ.இ: G/526

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

விடிவை அடைந்திடுவர் வடிவேலன் துணையோடு

இசையொடு எழுபக்தி இணைந்து இலங்கிடும்
உற்சவ காலமதில் நல்லூரில்
அசையா விருப்பொடு மெய்யடியார் அனுதினமும்
ஆறுமுகனை வழிபட வந்திடுவர்
திசையெட்டு அடியாரும் திருவிழாக் காண்பதற்கு
தூய்மையாய் வருவார்கள் கடல்கடந்தும்
விஞ்சை பெற்றிடுவர் வடிவேலன் துணையோடு
விடிவை அடைந்திடுவர் விருப்புடனே.

குளப்பிட்டி க.அருமைநாயகம்

பலவாய் ஒன்றாய்!

ஒருதிருமுருகனே ஓங்கார
வடிவழகனே-உந்தன்
அருளின்றேல் அசையுமோ
அணுவும் கூட-அருவும்
உருவுமாகி அநாதியாம்ப்
பலவாய் ஒன்றாய் நிற்கும்
திருவருளி நிறைந்த நல்லை
பதியுறைகின்ற பெருமானே!

இராம ஜெயபாலன்

சாந்தியை ஈந்திடையா!

நல்லை நக ரமர்ந்து
நாளு மெமக் கருளும்
வல்ல தமிழ்க் குரலா
வடிவேலா வுந்த னருளி
தொல்லை களைந் தென்றும்
தூயவழி செல்வ தற்கு
எல்லையிலா வுன் கொடியை
ஏற்றி யெமைத் தாங்கிடையா!

சிந்தையை யள்ளும் நல்லை
சீரிளம் குமர வள்ளல்
எந்தையா யிருந் துலகில்
ஏற்ற மளித் தொளிர
விந்தைசே ருந்த னாட்சி
விளங்கிரு மருளி னாட்சி
சந்தத மெம்மைக் காத்து(ச்)
சாந்தியை யீந் திடையா!

காலைக் கதி ரொளியாய்
களமாடி யெமை யாளும்
கோலத் திருச் சுடரே!
கொழு கொம்பாய் நீயிருந்து
சீலம் சிறந் தொளிர
சீர்த்தி தமைத் தந்திடையா
ஞாலம் நனி சிறக்க
நல்ல வழி காட்டிடையா!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

நல்லைக் குமரப் "பா"

ஆர்த்த பிறவிப் பிணிதீர்க்கும்
அழகன் முருகன் திருநாமம்
ஆர்தான் சொல்லி அழைத்தாலும்
அருகில் வந்தே அமர்ந்திடுவான்
வேர்போல் நின்றே நிமிர்த்திடுவான்
வேண்டும் படியே அமர்த்திடுவான்
சீராய் எம்மைச் செப்பனிடத்
திகழ்வான் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

பாரதம்

கார்கில் நாயகன் வாஜ்பாய் காலமானார்!
அரசியல் தலைவர்கள் திரண்டு அஞ்சலி

பிரதமர் மோடி

பாராளுமன்ற உறுப்பினர்
சோனியா காந்தி

முன்னாள் பிரதமர்
மன்மோகன் சிங்



காங்கிரஸ் தலைவர்
ராகுல் காந்தி

தமிழக ஆளுநர்
பன்வாரிலால்

தி.மு.க.செயல் தலைவர்
மு.க.ஸ்டாலின்

மாநிலங்கள் அவை உறுப்பினர்
கனிமொழி

இந்தியாவின் முன்னாள் பிரதமரும் கார்கில் போர் நாயகனுமான அடல் பிகாரி வாஜ்பாய் நேற்று முன்தினம் வியாழக் கிழமை காலமானார். இவருடைய உடல் நேற்று காலை பாரதிய ஜனதா தலைமை அலுவலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டது.

முன்னாள் பிரதமர் மறைவிற்கு உலகத

(டில்லி)

முன்னாள் பிரதமர் வாஜ் பாய் மறைவையொட்டி உலக தலைவர்கள் பலரும் இரங் கல் தெரிவித்துள்ளனர்.

பாஜகவை தோற்றுவித்த வரும் முன்னாள் பிரதமரு மான அடல் பிகாரி வாஜ் பாய் (வயது 93) டில்லி எய்மஸ் மருத்துவமனையில் நேற்று முன்தினம் மாலை 5 மணி யளவில் காலமானார்.

மருத் துவ மனை யில் இருந்து வீட்டுக்கு கொண்டு வரப்பட்ட வாஜ்பாய் உடலுக்கு ஜனாதிபதி, பிரதமர், மாநில முதல்வர் கள், அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்ற னர்.

மேலும், வாஜ்பாய் மறை விற்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித் துள்ளனர்.

இந்நிலையில், அண்டை நாடு களின் தலைவர்கள் பலரும் வாஜ்பாய் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ள னர். விரைவில் பாகிஸ்தான் பிரத மராக பதவியேற்க உள்ள இம்ரான் கான், வாஜ்பாய் மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், அடல் பிகாரி வாஜ்பாய் இந்திய துணை கண்டத்தின் மிகப்பெரிய அரசியல் ஆளுமை, அவர் வெளியுறவு அமைச் சராக பொறுப்பு வகித்த போது இந் தியா-பாகிஸ்தான் இடையிலான

வெளிநாடு

"இந்தியா எழுந்து நின்று அழுகிறது"

முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கு கவிஞர் வைரமுத்து இரங்கல்

(சென்னை)

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மறைவிற்கு கவிஞர் வைரமுத்து இரங்கல் தெரிவித்துள்ளார். கவிஞர் வைரமுத்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது,

இந்தியப் பெருந்தலைவர் வாஜ்பாயின் மரணம் என்பது ஒன்றல்ல. ஒரு தலைவருக்கும் ஒரு கவிஞருக்குமென்று இரண்டு மரணங்கள் நேர்ந்திருக்கின்றன. இந்த மாதம் மரணத்திற்கு இலக்கியப் பசி போலும். தெற்கே ஓர் இமயமாகத் திகழ்ந்த கலைஞரையும், வடக்கே ஒரு கடலாகத் திகழ்ந்த வாஜ்பாயையும் ஒரே மாதத்தில் உண்டு முடித்திருக்கிறது. வாஜ்பாய்க்கான கண்ணீர் மண்தொடும் பொழுது அவருக்கான பெருமைகள் விண்தொடும் என்பது எனது நம்பிக்கை.



அவருக்கு மதநேயம் உண்டு.ஆனால் அதைத்தாண்டிய மனித நேயம் உண்டு. தன் மொழியைத் தாழவிடாத மொழிப்பற்று உண்டு. ஆனால் இன்னொரு மொழியைத் தாழ்த்திவிடாத தனிப் பண்பு உண்டு.

கவிதை மனம்கொண்ட ஒருவன் பொதுவாழ்வில் புகுந்தால் அவன் கடைசிவரை கண்ணியமாகவே இருப்பான் என்பதற்கு வாஜ்பாயின் வாழ்வே எடுத்துக்காட்டு.

இந்தியா எழுந்து நின்று அழுகிறது.
ஒரு கண்ணால் ஒரு தலைவனுக்காக
மறு கண்ணால் ஒரு கவிஞனுக்காக
வாஜ்பாய்க்கு என் கண்ணீர் வணக்கம்.

இவ்வாறு டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். (7)

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மறைவு ஏழுநாட்களுக்கு துக்கம் அனுஷ்டிப்பு

மத்திய அரசு அறிவிப்பு

(டில்லி)

முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் மறைவுக்கு நாடு முழுவதும் 7 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும்என்று மத்திய அரசு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.



பாஜகவின் முதுபெரும் தலைவரும், முன்னாள் பிரதமருமான அடல் பிகாரி வாஜ்பாய் முதுமை, உடல்நலக்குறைவால் எய்ம்ஸ் மருத்துவமனையில் கடந்த ஜூன் மாதத்தில் இருந்து சிகிச்சை பெற்று வந்தார். ஆனால், உடல் உள்ளுறுப்புகள் சிகிச்சைக்கு ஒத்துழைக் காததால், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை 5.05 மணிக்கு காலமானார். அவருக்கு வயது 93.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மறைவுக்கு 7 நாட்கள் துக்கம் அனுஷ்க்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இது குறித்து உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மறைவையொட்டி நாடு முழுவதும் நேற்று முன்தினத்திலிருந்து 22 ஆம் திகதி வரை துக்க நாளாக அனுஷ்க்கப்படும்.

தேசியக்கொடிகள் அரசு அலுவலங்களில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும். அனைத்து அரசு நிகழ்ச்சிகளும் 7 நாட்களுக்கு இரத்து செய்யப்படுகிறது. அனைத்து இந்தியத் தூதரகங்களிலும் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கும். (7)

த்தலைவர்கள் இரங்கல்

உறவுகளை மேம்படுத்தும் பொறுப்பை ஏற்றார்.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவு மேம்பட அவர் எடுத்த முயற்சிகள் என்றும் நினைவு கூரப்படும் என தெரிவித்துள்ளார்.

பங்காளதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில்,வாஜ்பாய் மறைவை கேட்டு அதிர்ச்சி அடைந்ததாகவும், அவரின் நல்லாட்சி மற்றும் பிராந்திய அமைதியை மேம்படுத்திய விதம் போன்றவற்றை நினைவுகூருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், 1971ஆம் ஆண்டு வங்கதேச விடுதலையில் வாஜ்பாய் முக்கிய பங்காற்றியுள்ளார்.

இன்றைய தினம் வங்க தேச மக்களுக்கு சோகமான தினம் என தனது இரங்கல் குறிப்பில் ஹசினா குறிப்பிட்டுள்ளார். (7)

கேரளாவில் தொடர் கனமழையால் பலி எண்ணிக்கை 100 ஆக உயர்வு



(டில்லி)

கேரள மாநிலத்தில் வரலாறு காணாத அளவு பெய்து வரும் கன மழையால் இது வரை 100 பேர் பலியாகியுள்ளனர்.

பாய்ந்தோடும் வெள்ளத்தில் சிக்கி 300-க்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். மீட்பு நடவடிக்கையை எதிர்பார்த்து ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் சிக்கி தத்தளித்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. 1,65,538 பேர் 1135 முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

2857 வீடுகள்சேதமடைந்து உள்ளன.3393 ஹெக்டேயர் பயிர்கள்நாசமடைந்தன. மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (7)

லிபிய முன்னாள் ஜனாதிபதி கடாபி ஆதரவாளர்கள் 45 பேருக்கு மரண தண்டனை

(டிரிபோலி)

லிபியா முன்னாள் ஜனாதிபதி கடாபி ஆதரவாளர் கள் 45 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதியதி தீர்ப்பு கூறினார்.

2011ஆம் ஆண்டு அரபு நாடுகள், ஆபிரிக்காவின் வடபகுதி நாடுகள் ஆகிய வற்றில் திடீர் புரட்சி ஏற்பட்டது. இதில் சில நாடுகளில் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

சில நாடுகள் ஆட்சியை தக்க வைத்துக் கொண்டன.

லிபியா நாட்டில் நீண்ட காலமாக முகமது கடாபி ஆட்சியில் இருந்து வந்தார். அங்கும் புரட்சி ஏற்பட்டது.

புரட்சியாளர்கள் நாட்டை கைப்பற்றிக் கொண்டனர். கடாபி புரட்சிக் கும்பலிடம் சிக்கினார். அவர்கள் அவரை அடித்து கொன்றார்கள்.

ஜனாதிபதிக்கு எதிராக டிரிபோலி நகரில் போராட்டம் நடந்து கொண்டிருந்த போது அவர்களை ஒடுக்குவதற்கு ராணுவமும், கடாபியின் ஆதரவாளர்களும் கடும் தாக்குதலில் ஈடுபட்டார்கள். இதில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இவ்வாறு கடாபிக்கு ஆதரவாக செயற்பட்டவர் கள் மீது புதிய ஆட்சியாளர் கள் நடவடிக்கை மேற் கொண்டனர். புரட்சியின் போது பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய கடாபி ஆதரவாளர்களை கைது செய்தனர்.

அதில் 128 பேர் மீது கொலை குற்றம்சாட்டப்பட்டது. அவர்கள் மீதான வழக்கு டிரிபோலி நீதிமன்றில் நடந்து வந்தது.

அதில் 99 பேருடைய குற்றம் உறுதி செய்யப்பட்டது.

அவர்களில் 45 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். (7)

மாகாணத் தேர்தல் பழைய முறைப்படியே

அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது நிலவும் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையின் கீழ் நடத்துவதற்கே வாய்ப்பு இருப்பதாக ஐ.தே.க. அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்ட ஒழுங்குகள் முழுமைப்படுத்தப்படாதுள்ளதாகவும் இதனால், புதிய முறைமையில் நடத்துவது சாத்தியமில்லாத ஒன்று எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்பொழுதுள்ள சட்ட ஒழுங்குகளின் படி எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என பிரதமர் கட்சித் தலைவர்கள் கூட்டங்களில் பல தடவைகள் கூறிவருவதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பில் கட்சித் தலைவர்கள் மத்தியில் இருவேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. புதிய எல்லை நிர்ணய ஆணைக்குழு அறிக்கை எதிர்வரும் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் கிரியெல்ல தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையின் கீழ் நடத்துவதற்குத் தேவையான போராட்டத்தை எதிரணியினருடன் இணைந்தாவது முன்னெடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

மகிந்ததான் அடுத்த ஜனாதிபதி

அடித்துக் கூறுகிறார் குமார வெல்கம

(கொழும்பு)

கூட்டு எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷதான் எனவும், சட்டத்தில் மாற்றம் செய்து அவரையே நாட்டின் தலைவராக கொண்டு வருவோம் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.



கூட்டு எதிர்க்கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் நாட்டில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதாகவும் இதன் உண்மை நிலை என்ன வென அவரிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவைத் தவிர சிறந்த தலைவர் ஒருவரை தாம் காணவில்லை யெனவும் அவரே பொருத்தமானவர் எனவும் குமார வெல்கம மேலும் தெரிவித்தார். (இ-7)

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப்பெற சுயாதீனமாகச் செயற்பட வேண்டுமாம்

கூட்டு எதிரணிக்கு பிரதியமைச்சர் பெரேரா அறிவுரை

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் பதவியை கூட்டு எதிரணியினர் பெற வேண்டுமாயின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதித்துவத்தை நீக்கிக் கொண்டு சுயாதீனமாக இருக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க செயலாளரும் பிரதி அமைச்சருமான அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை கைப்பற்றுவதனை விடுத்து கூட்டு எதிரணியினர் தற்போது எதிர்க்கட்சி தலைவர் பதவியை கைப்பற்றுவதற்கு முனைகின்றனர். ஆட்சியை கைப்பற்றுவதாக கூறிவிட்டு எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெறும் அளவுக்கு கூட்டு எதிரணி பலவீனப்பட்டுள்ளது. தற்போது கூட்டு எதிரணிக்கு பலமில்லை. ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் கூட்டு எதிரணி இரண்டாக பிளவடைந்து விட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து கொண்டு கூட்டு எதிரணி சுயாதீனமாக செயற்பட முடியாது. கட்சியின் பிரதிநிதித்துவத்தை முற்றாக துறந்து சுயாதீனமாக வேண்டும். அப்படிச் செய்தால் கூட்டு எதிரணியின் சுயாதீனப் போக்கை ஏற்றுக்கொள்ள முடியும்.

நான் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ளேன். எனவே இந்த கட்சித் தலைவரின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுள்ளேன். கட்சிக்கு எதிராக என்னால் செயற்பட முடியாது.

ஆகவே கூட்டு எதிரணியினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதித்துவத்தை நீக்கி விட்டு வந்தால் எமக்கு சந்தோஷமாகும்.

ஆகவே எதிர்க்கட்சி தலைவர் பதவியை கைப்பற்றுவதற்கு முதல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை கூட்டு எதிரணி கைப்பற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

இன்று ஒரு தகவல்

நான் எனும் நினைப்பு!

ஈகோ (ECO) என்கிற வார்த்தையைச் அண்மைக்காலமாக அடிக்கடி கேள்விப்படுகிறோம். நான் என்கிற அகம்பாவமான நினைப்புத்தான் இந்த ஈகோ.

நான் என்பது மேற்தோற்றத்திற்குச் சாதாரண சொல்தான். ஆனால் பொருள் பொதிந்தது. ஏராளமான விடயங்களை உள்ளடக்கியது.

"என்னையா நீ அவமானப்படுத்தி விட்டாய்?" என்பதற்கும், என்னை ஏன் அவமானப்படுத்தினாய்?" என்பதற்கும் இடையே நுணுக்கமான வேறுபாடுகள் உண்டு.

என்னையா என்பதற்கு நான் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா? நீ எவ்வளவு சாதாரண ஆள் தெரியுமா? என்கிற கேள்விகளை உள்ளடக்கிய அர்த்தம் உண்டு.

"நான் தலையிட்டால் தான் அந்தக் காரியம் முடியும்" என்று ஒருவன் சொன்னால் அது தன்னம்பிக்கையை மட்டுமே குறிக்காது. டேய்! உங்களாலெல்லாம் இது முடியாதுடா என்று சொல்லாமல் சொல்கிற அணுகுமுறை இது.

நான் என்னும் நினைப்பு அந்தக் காலத்து மன்னர்கள் முதல் இந்தக் காலத்துப் பெரிய மனிதர்கள் வரை அனைத்துத் தரப்பினரையும் நன்றாகவே சீரழித்துப் பார்த்திருக்கிறது.

நம்முடைய இந்த வளர்ச்சியும் உயர்வும் வெற்றியும் யாரால் என்று நினைத்துப் பார்க்காத தன்மையால் வருகிறது. அதுமட்டுமல்ல, எதிரியின் வலிமையை ஆராய்ந்து பாராமல் அவசரப்பட்டுத்தானே பெரியவன் என்கிற முடிவுக்கு வேகமாக வந்துவிடுவதால் வருகிறது.

இப்படி ஓவராகப் பேசிப் பேசித் தூங்கிக் கிடக்கும் எதிரியை உசுப்பி விட்டு விடுவதாலும் வருகிறது. மற்றவர்களை மதியாமல் உதாசீனப்புடுத்தத் தயங்காததால் வருகிறது.

நான் நான் என்று பிரித்துப் பேசித் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொள்வதால் எதிராளி வலிமையாகி அதனால் வருகிறது.

எல்லாம் இருந்தும் தன்னையும் அறியாமல் ஒருவன் சரிவதற்கு நான் என்கிற நினைப்புப் போதும். இந்த நினைப்பை விட ஒருவருக்கு வேறு வலிமையான எதிரியே வேண்டாம்.

லேனா தமிழ்வாணன்

வடக்கில் முகாமைத்துவ உதவியாளர்களாக 10 பேர் நியமனம்

வடக்கு மாகாண "முகாமைத்துவ உதவியாளர் தரம் 3" இற்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று கைதடியில் உள்ள உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்களுக்காக இடம்பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த 110 பேருக்கு முகாமைத்துவ உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது. இந்த நியமனங்களை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் வழங்கினர். (இ-9)

தந்தைக்கு கடன் கொடுத்துவிட்டு மாணவியைத் தாக்கிய பெண்ணுக்கு மறியல்

(கரணவாய்)

தந்தை பெற்ற கடனுக்காக பாடசாலை மாணவியான மகளைத் தாக்கிய பெண்ணை எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியிலுள்ள குடும்பஸ்தர் ஒருவர் கடனாக பணம் பெற்றுள்ளார்.

இந்நிலையில் தனியார் வகுப்பிற்கு சென்றுவிட்டு வந்த 11 வயதுடைய சிறுமியை அவரது தந்தைக்கு கடன் கொடுத்த பெண் மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த சிறுமி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸார் தாக்கு தலை மேற்கொண்ட பெண்ணை கைது செய்து நேற்று முன் தினம் வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)

வீட்டுத் திறப்புவிழா

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து அமைக்கப்பட்ட வீட்டின் திறப்பு விழா நேற்று இடம் பெற்றது. காந்தியூர் புலோலி பட்டியோடையைச் சேர்ந்த மங்களேஸ்வரி என்பவருக்கு 2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து இவ் வீடு அமைக்கப்பட்டது. (இ-60)

தாழ்மையுடன் கூடிய தலைமைத்துவத்தால் இந்தியாவை வழிநடத்தியவர் வாஜ்பாய்

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இரங்கல்



(கொழும்பு)

தனது நேர்மையான தாழ்மையுடன் கூடிய தலைமைத்துவத்தால் இந்தியாவை வழிநடத்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கு இலங்கைவாழ் தமிழ் மக்களின் சார்பில், அவரது குடும்பத்தினருக்கும்பாரதிய ஜனதா கட்சிக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,

இந்தியா தனது ஒரு மிகச் சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவரும் ஒரு சிறந்த அறிவாளியுமான முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயை இழந்துள்ளது.

முன்னாள் பாரத பிரதமரும் பாரதிய ஜனதா கட்சியின் தலைவருமான வாஜ்பாய், ஒரு மிகச்சிறந்த தலைவர் மட்டுமல்லாது அவரது தொலைநோக்கு தலைமைத்துவத்தின் கீழ் இந்தியா அநேக சாதனைகளை நிலைநாட்டுவதற்கும் வழிவகுத்தார்.

தனது நேர்மையான தாழ்மையுடன் கூடிய தலைமைத்துவத்தினால் இந்தியாவை வழிநடத்திய வாஜ்பாய், உலகம் முழுவதுமுள்ள ஆயிரக்கணக்கான மக்களினால் நேசிக்கப்பட்ட மதிக்கப்பட்ட ஒரு தலைவராவார்.

மூன்று முறை இந்தியப் பிரதமராக பதவி வகித்த வாஜ்பாய், மிகச்சிறந்த பேச்சாளர் மட்டுமல்லாது நல்ல நகைச்சுவை உணர்வு மிகுந்த ஒருவருமாவார். இந்திய பாராளுமன்றத்திலும் வெளியிலும் அவர் ஆற்றிய உரைகள் என்றைக்கும் நினைவிலிருக்கும்.

இந்திய மக்களுக்கு அவர் ஆற்றியதல்லாற்றகேவையை பாராட்டி இந்திய அரசினால் பாரத ரத்னா மற்றும் பத்ம விபூஷண் விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டன. இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பில், அவரது குடும்பத்தினருக்கும் , பாரதிய ஜனதா கட்சிக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய மக்களிற்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறேன். அன்னாரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார் மடம்	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி	நெல்லியடி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	100	90	80	70	120	100
உருளைக்கிழங்கு	120	100	100	90	120	100
பச்சமிளகாய்	200	140	180	170	250	160
தக்காளி	60	80	80	60	100	70
மரவள்ளிக்கிழங்கு	50	50	40	40	40	30
கோவா	140	160	130	80	160	160
கரட்	200	400	300	220	400	500
பூசணி	100	60	60	55	100	80
புடோல்	80	70	60	40	80	100
வாழைக்காய்	120	100	80	70	80	100
சின்ன வெங்காயம்	100	100	100	100	120	120
பெரிய வெங்காயம்	120	110	100	90	120	120
பாகற்காய்	150	140	140	150	200	120
வெண்டிக்காய்	40	50	40	40	80	60
கருணைக் கிழங்கு	80	100	100	80	120	100
பயற்றங்காய்	120	120	80	60	80	160
லீக்ஸ்	150	100	120	80	120	160
பீற்றூட்	80	100	80	100	120	160
கறிமிளகாய்	100	200	160	220	200	160
முருங்கைக்காய்	80	100	80	50	160	50
போஞ்சி	250	200	180	250	240	250
கத்தரித்தம்புள்ள	80	70	—	50	100	20
கீரை-1பிடி	30	25	30	30	30	30
தேசிக்காய்	30	30	50	50	80	20
தேங்காய் ஒன்று	60	50	40-50	45	30-50	30-60
இராசவள்ளி	150	160	140	120	200	200
வெங்காயப்பூ	160	140	120	90	200	100
முள்ளங்கி	40	50	50	40	80	100
பொன்னாங்காணி	30	30	40	20	30	40
வல்லாரை	15	60	20	10	20	20
ஈரப்பலா	60	60	50	130	80	30

புகைப்பொருட்களை கட்டுப்படுத்தும் சட்டத்தை நடைமுறைப்படுத்த சில உறுப்பினர்கள் எதிர்ப்பு

வலி.தெற்கில் ஆலோசனைக்குழு அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

பொது சுகாதாரத்தினை சீர்குலைக்கும் புகையிலை சார் புகைப் பொருட்களை கட்டுப்படுத்தும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வலி.தெற்கு பிரதேச சபையில் சில உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டமை தொடர்பில் ஏனைய உறுப் பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வலி.தெற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 14 ஆம் திகதி இடம் பெற்றது. இதில் யாழ் மாவட்டத்தில் புகைபொருட்களின் பாவனை அதிகரிப்பதால் போதைப் பொருள் பாவனை அதிரித்து வருவதாக தெரிவித்து இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் கவனம் எடுக்க வேண்டும் என குறிப் பிட்ட உறுப்பினர் கு.டெனிஸ் கமல்றாஜ்.

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட வியாபார நிலைய உரிமையாளரோ அல்லது ஆளொருவர் பாடசாலை, முன்பள்ளி வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள வியாபார நிலையங்களிலோ அல்லது நடமாடும் வியாபார நிலையங்களிலோ புகையிலை சார் புகைப்பொருட்களை, களஞ்சியப்படுத்தவோ, விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ ஆகாது, வியாபார நிலைய உரிமையாளரோ அல்லது ஆளொருவரோ வணக்கஸ் தலத்தின் வளாகத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள வியாபார நிலையங்களிலோ, வளாகத்திலோ அல்லது நடமாடும் வியாபார நிலை யங்களிலோ புகையிலை சார் புகைப் பொருட்களை, களஞ்சியப்படுத்தவோ, விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ ஆகாது என்றும்,

இச் சட்டங்களை மீறுகின்ற எவரேனும் நீதவான் ஒருவரின் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றவாளியாக்கப்பட்டதன் மீது ரூபா 10 ஆயிரத்திற்கும் குறையாததும் 20 ஆயிரம் ரூபாவினை விஞ்சாததுமான குற்றப் பணத்திற்கு ஆளாதல் வேண்டும், ஆளொருவர் ஏதேனும் பொதுமக்கள் பயன்படுத்தும் பொது இடம் ஒன்றில் புகை பிடிப்பது ஆகாது என்றும் அந்த சட்டங்களை மீறுகின்ற எவரேனும் ஆளொருவர் நீதவான் ஒருவரின் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்ற வாளியாக்கப்பட்டதன் மீது ரூபா 2000 இற்கு குறையாததும் 5000 ரூபா வினை விஞ்சாத குற்றப் பணத் திற்கு ஆளாதல் வேண்டும் என 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 பிரிவின் கீழ் புதிய உப சட்டத்தினை உருவாக்க முடியும் . அதன் பிரகாரம் உப சட்டத்தினை உருவாக்க வேண்டும் என சபையில் முன்மொழிந்திருந்தார்.

சபையில் பெண் உறுப் பினர்கள் உட்பட ஏனைய சில உறுப்பினர்கள் இந்த விடயத்துக்கு ஆதரவு தெரிவித்த போதும், ஏனைய சில உறுப்பினர்கள், இது புகையிலையை தடைசெய்வதற்கு ஏற்றதாக அமைந்துவிடும் என தெரிவித்து மேற்குறித்த புகைப்பொருள் கட்டுப்பாட்டை விதிக்க முடியாது என எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக சபையில் பல்வேறு கருத்துக்கள் எழுந்ததை அடுத்து சட்ட ஆலோசனைகள் பெற்ற பின்னர் அடுத்த அமர்வில் இந்த விடயம் எடுத்துக் கொள்ளப்படும் என சபை தவிசாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

இலங்கை-ஓமான் இரட்டை வரிவிதிப்பு குறித்து உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஓமான் இரட்டை வரி விதிப்பை தவிர்த்தல் மற்றும் வரிஏய்ப்பைத் தடுத்தல் தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மட்டத்திலான இரண்டாவது இலங்கை ஓமான் இருபக்க கலந்தாலோசனைகளின்போது இலங்கை மற்றும் ஓமான் அரசாங்கங்களுக்கிடையில் இரட்டை வரிவிதிப்பை தவிர்த்தல் மற்றும் வரிஏய்ப்பைத் தடுத் தல் தொடர்பான உடன்படிக்கையொன்று சம்பந்தப்பட்ட தலைவர்களால் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டது.

இருபக்க ஆலோசனைக் கான இலங்கை தூதுக்குழு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் ஓமானின் தூதுக்குழு இராஜ தந்திரத்திற்கான கீழ் செயலாளர் மற்றும் ஓமான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் முதுகலைத் திணைக்களத் தலைவர் மஹ்மூத் அவாத் அல்ஹஸன் ஆகியோரால் வழிநடத்தப்பட்டன.

இந்தச்சந்திப்பின்போது இலங்கை மற்றும் ஓமான் மேலும் உறுதியான உயர் இருபக்க அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மீள் உறுதிப்படுத்தின. இக் கலந்தாலோசனைகள் 2014 இல் மஸ்கட்

நகரில் நடை பெற்ற முதலாவது இலங்கை ஓமான் இருபக்க அரசியல் கலந்தாலோசனைகளின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மீதான பரிசீலனை நடவடிக்கை மற்றும் இருபக்க ஒத்துழைப்புக்கான புதிய வழிகள் ஆகியவற்றை மையப்படுத்தியிருந்தன. இரு தரப்பினரும் வர்த்தகம், வணிகம் ஆகியவற்றை ஸ்தாபிப்பதன்பால் உழைப்பதற்கும் மத்திய கிழக்குக்கான ஒருவாயிலான ஓமானுக்கும் இந்து சமுத்திரத்தின் ஒரு கேந்திரமான இலங்கைக்குமிடையிலான கப்பல் தொடர்புகளை உருவாக்கு வதற்கும் உடன்பட்டனர்.

வர்த்தகம், சுற்றுலா, குடிவரவு, குடியகல்வு, ஊழியர் மற்றும் மனிதவள பயிற்றுவிப்பு, பாதுகாப்பு, விவசாயம், மேற்படிப்பு மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் பரஸ்பர ஒத்துழைப் புக்கு அவசியமான பரந்த விடயங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு கலந் தாலோசிக்கப்பட்டன. மேலும் மீன்பிடி, விளையாட்டுக்கள், எண்ணெய் மற்றும் எரி வாயு என்பன எதிர்காலத் தில் சாத்தியமான ஒத்துழைப்புக்கான துறைகளாக இனங் காணப்பட்டன. மேலும் இலங்கை தேசிய வணிக அறை மற்றும் ஓமான்வணிக மற்றும்கைத்தொழில் அறை ஆகியவற்றுக்கிடையிலான இலங்கை ஓமான் வணிக சபையொன்றை ஸ்தாபிப்பதற்கு உதவி புரிவதற்கும் இதன்போது உடன் பட்டனர்.

ஆரம்பத்தில் இரு தரப் பினரும் மேம்படுத்தல் மற் றும் பரஸ்பர முதலீட்டுக்கான பாதுகாப்பு தொடர் பான ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உடன் பட்டதுடன், திறன் வாய்ந்த ஊழியர் களின் இலங்கையிலிருந்து ஓமானுக்கான நகர்வை இலகுவாக்குவதற்கு திறன் அபிவிருத்தி மற்றும் தகைமைகளை அங்கீகரித்தல் தொடர்பான புரிந்துணர்வு உடன் படிக்கை ஒன்றை மேற்கொள்வதற் கான ஆலோசனைகளையும் ஏற் றுக்கொண் டுள்ளனர்.

இரு தரப்பினரும் பிராந் திய ரீதியான ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட பல்தரப்பு ரீதியான ஆர்வங்களை முன் னேற்றுவதன் முக்கியத்துவம் பற்றியும் வலியுறுத்தியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது, உயர் மட்ட வருகைகளின் மாற்றல்கள் ஊடாக இரு தரப்பு அரசியல் உறவை பலப்படுத்தல் பற்றியும் கலந் துரையாடப்பட்டது.

இதன்போது ஓமான் பிரதிநிதிகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக்மாரப்பன இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

ஓமான் பிரதிநிதிகள் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் சபாநாயகர் கருஜெயசூரியவை சந்திப்பதற்கான அழைப் பினையும் விடுத்துள்ளனர். (இ-7)

நுவரெலியாவில் 291 குடும்பங்கள் இடம்பெயர்வு

(ஹற்றன்)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கப் பகுதியின் மூன்று வான்கதவுகள் நேற்றுக் காலை திறந்து விடப்பட்டுள்ளன.

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் அதிகளவில் நீர் மட்டம் உயர்ந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை ஒரு வான்கதவு திறக்கப்பட்டு மொத்தமாக மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை, வலப்பனை போன்ற பகுதிகளில் அதிகளவிலான மழை பெய்து வருவதுடன் பலத்த காற்றும் வீசி வருகின்றது.

பிரதான வீதிகள், பெருந்தோட்ட பகுதிகள் மற்றும் கிராமப் பகுதி குடியிருப்புப் பகுதிகளில் மண்சரிவுகளும் ஏற்பட்டு வருகின்றன. இது வரை நுவரெலியா மாவட்டத்தில் மூன்று பிரதேச செயலக பகுதிகளில் 291 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. நுவரெலியா, வலப்பனை, அம்பகமுவ போன்ற பிரதேச செயலகப் பகுதிகளில் குறித்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர்முகாமைத்துவ நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம். பண்டார தெரிவித்துள்ளார். (இ-7)

பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

பிறப்பு எண் 4 விதி எண் 1

இராகு சூரிய ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் உலக அறிவு நிரம்பியவர்கள். நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்க்கையில் வெற்றியடைவார்கள். பல நல்ல நண்பர்கள் அமைவார்கள். சென்ற இடமெல்லாம் பல சிறப்புக்கள் வந்து குவியும். எல்லாத் துறைகளைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். ஏறிய நெற்றியும், கூரிய பார்வையும் உடையவர்கள். அரசியலில் புகழ் மகுடம் கிடைக்கும். இலட்சியத்தை அடைய எப்பேர்ப்பட்ட தியாகத்தையும் செய்வார்கள். பலபேர் இவரை நண்பராக அடைய விரும்புவார்கள்.

பேச்சாலும், தனது எழுத்தாலும் தனிப்பட்ட முத்திரை பதித்து, பெரும் புகழ் சேர்ப்பார்கள். இளமையில் போராடும் இவர்கள் வயது செல்லச் செல்ல வாழ்க்கையில் வசந்தங்கள் மலரும். எப்போதும் பலபேர் சூழவே இருப்பார்கள். நீதித்துறை, சட்டம், சமுதாயம், அரசியல், சினிமா, விளையாட்டு, பத்திரிகை, கோபுரம் முதல் குடிசை வரை அனைத்துத் துறைகளிலும் கால்பதிப்பார்கள். இவர்களின் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் சமுதாயத்தைச் சீர்படுத்தும். புதுப்புது நாடு நகரங்களை .ஸ்தாபிக்கும் ஆற்றலுடையவர்கள். மிகவும் சுதந்திரமான நடவடிக்கையுடைய நபர்கள். தான் கால்பதிக்கும் எல்லாத் துறைகளிலும் முத்திரை பதிப்பார்கள். மனதில் புதுப்புதுக் கருத்துக்கள் தோன்றிய வண்ணமிருக்கும்.

உலக விடயங்களில் ஆர்வமிருக்கும். ஏதாவது புது மனிதர்களிடம் தன்னுடைய கருத்துக்களைக் கூறிக் கொண்டேயிருப்பார்கள். அடிக்கடி வெளியூர்ப் பயணம் செய்வதில் ஆர்வம் உடையவர்கள். இயற்கைக் காட்சிகள், மிருகங்கள், பூச்சிகள் போன்றவற்றை இரசித்துப் பார்ப்பார்கள். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களைச் சுற்றிப் பார்ப்பார்கள். இவர்கள் தங்கள் கருத்துக்களை, பலர் வியக்கும் விளக்கங்களுடனும் வர்ணனைகளுடனும் பிறர் மத்தியில் எடுத்துரைப்பார்கள். மற்றவர்கள் போற்றுதலையும், தூற்றுதலையும் ஒரு போதும் கண்டுகொள்ளவே மாட்டார்கள்.

இவர்கள் பலருக்கும் பயன்தரும் கருத்துக்களையே பிறரிடம் பறைசாற்றுவார்கள். தனது கருத்துக்களை தெளிவாக எடுத்துரைப்பார்கள். மற்றவர்களுக்குப் புரியாத விடயங்களைத் தெளிவாக எடுத்துரைப்பார்கள். உலகம் சுற்றும் அபிமானிகள் என்றால் இவர்கள்தான். எளியவர்களுக்கு உதவிகள் செய்து மனமகிழ்ச்சி அடைவார்கள். அதீத சக்திகள் மீது நம்பிக்கை இருக்கும். நுண்ணறிவு மிக்கவர்கள். மூளை பலமிக்கவர்கள். கடின உழைப்பாளிகள். பிறருக்குக் கட்டுப்பட்டு நடக்கவே மாட்டார்கள். எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புவார்கள். மற்றவர்களின் கேள்விகளுக்கு மின்னல் வேகத்தில் பதிலளிப்பார்கள்.

காதலில் விழுந்து, அதனை உதறித்தள்ளவும் தயங்க

மாட்டார்கள். சாதிக்கும் எண்ணமுடையவர்கள். சில விடயங்களில் கூண்டிப்பு மிக்கவர்கள். செய்யும் தொழிலில் கண்டிப்புடனும், உற்சாகத்துடனும், தன்னம்பிக்கையுடனும் செயற்படுவார்கள். நல்ல கணவன் மனைவி வாய்த்துவிடும். ருசி மிகுந்த உணவை விரும்பி உண்பார்கள். ஞாபகசக்தி அதிகமிருக்கும். வாகனப் பிரியர்கள். வாக்கு வன்மை உடையவர்கள். தனது எண்ணப்படியே காரியம் ஆற்றுவார்கள். சமூகத்தைத் தட்டியெழுப்பும் ஆற்றல் உண்டு. பணவரவு வந்தவுடன் செலவு செய்து விடுவார்கள். உடம்பில் இரகசிய சக்திகள் குடிகொள்ளும். சென்ற இடத்திலெல்லாம் நண்பர்களை உருவாக்குவார்கள். நேர்மையைத் தவிரப் போலிகளை வெறுத்து ஒதுக்குவார்கள். நண்பர்கள் புடைசூழ வாழும் இவர்கள் சிலருக்கு உதவிகள் செய்யச் சென்று, பிரசினைகளில் மாட்டிக் கொண்டு அவதிப்படுவார்கள். புகழ்ச்சிக்கு மயங்கி விடுவதால் நண்பர்கள் இவர்களை புகழ்ந்தே காரியம் சாதித்து விடுவார்கள். ஒரு காரியத்தில் இறங்கி விட்டால் பசி, தூக்கம் என்று பாராமல் உழைப்பார்கள்.

எங்கு சென்றாலும் பல விடயங்களைச் சேகரித்துக் கொண்டே இருப்பார்கள். பலரிடம் நல்ல மனிதர்கள் என்ற பெயரும், சிலரிடம் கெட்ட பெயரும் சம்பாதிப்பார்கள். பொறாமைக்காரர்கள் என்றும் சில நேரங்களில் இவர்கள் அழைக்கப்படுவார்கள். யார் என்ன எது சொன்னாலும் தீர விசாரித்து ஒரு முடிவுக்கு வருவார்கள். தன் மனம் கூறும் கருத்துக்களை மறைக்காமல் வெளியிடுவார்கள். பிறர் பேசும்போது பொறுக்காமல் குறுக்கேயும் பேசுவார்கள்.

சிற்றின்ப ஆசைகள் நிறைய இருக்கும். ஆனால் முறை தவறிய விடயங்களை வெறுப்பார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1,10,19,28,6,15,24

துரதிர்ஷ்ட திகதிகள்
8,17,26

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம்

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கோமேதகம், நீலக்கல், மாணிக்கம், அக்கோமரின், சூரியகாந்தக்கல், ஓபல்.

(தொடரும்....)

இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்



“நொக்ஸ் இறுதியாக சிறையில் இருந்து தப்பி, காடுகளையும் மலைகளையும் கடந்து அநுராத புரத்தை வந்தடைகின்றான். அவன் சிறையில் இருந்த போது சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தான். அநுராத புரம் வந்த நொக்ஸ், அங்குள்ள மக்கள் சிங்கள மக்கள் என்று எண்ணிச் சிங்கள மொழியில் பேசியிருக்கின்றான். ஆனால், அநுராதபுரத்தில் இருந்த அப்போதைய மக்களுக்குச் சிங்களம் புரியவில்லை. அவர்கள் தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் என்பதை அவன் புரிந்து கொண்டான்.”

தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

எனவே, தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும், சிங்கள மன்னர்கள் போல் அநுராதபுர இராச்சியத்தில் நீண்டகாலம் ஆட்சி புரிந்திருக்கின்றார்கள் என்ற வரலாற்று உண்மையை, மேற் காட்டிய குறிப்புகளினூடாக நிரூபிக்க முடிகின்றது. இரண்டாவ தாக, தமிழ்மன்னர்கள் அவ்வாறு நீண்டகாலம் நல்லாட்சி செய்தி ருப்பதை, பாளி வரலாற்று நூல்கள் குறிப்பிடும்போது, அம் மன்னர் கள் அம்மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்திருக்க வேண்டும். அத்தோடு அப் பிர தேசத்தில் பெருமளவு தமிழ் மக்க ளும் செல்வாக்குடன் வாழ்ந்திரு க்க வேண்டும். அல்லாவிடில் தமிழ் மன்னர்கள் ஆட்சிக்கு வந்திருக்க முடியாமல் இருந்திருக்கும். சிங் கள, தமிழ் இன உணர்வுகள் இல் லாத ஆரம்பகால வரலாற்றுக் கால கட்டத்தில் சிங்கள, தமிழ் மக்கள் ஒன்றுசேர்ந்து சிங்கள மன்னர் களையும், தமிழ் மன்னர்களையும் பாகுபாடு இன்றி ஆதரித்திருக்க வேண்டும். இதிலிருந்து இலங்கை வரலாற்றை எழுதிய பிற்கால வர லாற்று ஆசிரியர்கள் தமிழர்கள் ஆட்சி செய்தமை பற்றிய விடயங் களை யும் வரலாற்றில் சேர்த்துக் கொள்ள வில்லை எனத் தெரிகின்றது.

அநுராதபுரப் பிரதேசத்தில், ஆதிகாலம் தொடக்கம் தமிழர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது முன்னர் தெளிவாகக் கூறப்பட் டது. அத்தோடு இலங்கையில் 1658 இலிருந்து ஆட்சிசெய்த ஒல்லாந்த ரின் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பாகமாகிய பதினேழாம் நூற்றாண் டின் இறுதிப் பகுதியில் நடந்த ஒரு நிகழ்வு மேற்கூறப்பட்ட வரலாற் றுண்மையை நிரூபிப்பதாக உள்ளது. வர்த்தகனான றொபெட் நொக்ஸ் (Robert Knox) என்ற ஆங்கிலேயன் இலங்கைக்கு வந்த வேளையில் கண்டி அரசனால் சிறைபிடிக்கப்பட் டான். பல வருடங்கள் சிறையில் இரு ந்த நொக்ஸ் இறுதியாக சிறையில் இருந்து தப்பி, காடுகளையும் மலை களையும் கடந்து அநுராதபுரத்தை வந்தடைகின்றான். அவன் சிறையில் இருந்தபோது சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தான். அநுராத புரம் வந்த நொக்ஸ், அங்குள்ள மக் கள் சிங்கள மக்கள் என்று எண் ணிச் சிங்கள மொழியில் பேசியி ருக்கின்றான். ஆனால், அநுராதபுரத் தில் இருந்த அப்போதைய மக்க ளுக்குச் சிங்களம் புரியவில்லை. அவர்கள் தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் என்பதை அவன் புரிந்து கொண் டான். இதனை றொபட் நொக்ஸ் தனது நூலாகிய “Historical Rela-tion of Ceylon” இல் எழுதியிருக்கின் றான். வரலாற்றுக் காலத்திலிருந்து, தமிழ்மக்கள் அநுராதபுர பிரதேச த்தில் செறிந்து வாழ்ந்திருக்கின் றார்கள் என்பதும், அங்கு பல தமிழ் மன்னர் ஆட்சி அளவிற்கு அம் மக்கள் செல்வாக்குள்ளவர்களாக இருந்திருக்கின்றார்கள் என்றும் இதிலிருந்து அறிய முடிகின்றது.

ஆனால் அவ்வாறான வரலாற்றுச் செய்திகள் பாளி, சிங்கள நூல்க ளில் பெரிதாகக் கருத்திற் கொள்ளப் படவில்லை என்றும் தெரிகிறது. பௌத்த பிக்குவாகிய மகாநாம தேரர், பௌத்த வரலாறாகவே அநுராதபுர இராச்சி யத்தின் வரலாற்றை எழுதவேண்டிய தேவை இருந்ததே இதற்கு அடிப் படைக் காரணம். பௌத்தமதத்தின் எழுச்சியும், பிராகிருத மொழியின் செல்வாக்கும் மாகாநாம தேரர் காலத்துக்குப் பின் சிங்கள மொழி யின் தோற்றத்திற்கும், சிங்கள இனக் குழுவின் அடையாளத்துக்கும் வழி வகுத்தன. மேலும், தமிழ் நாட்டில், கி.பி ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து எழுச்சிபெற்ற பல்லவ அரசு, தமி ழையும், சைவத்தையும் மிக முன் னிலைப்படுத்தியிருந்தது. இதன் விளைவாக, கி.பி மூன்றாம் நூற்றா ண்டு களிலிருந்து தமிழ் நாட்டில் வளர்ச் சியும், செல்வாக்கும் பெற்ற பௌத்த மதம் வீழ்ச்சியடையத் தொடங்கி யது. மேலும், இந்நிலைமை சோழர் காலமாகிய கி.பி எட்டாம் நூற்றாண்டி லிருந்து மிகத் தீவிரமடைந்தது.

மேலும், கி.பி பத்தாம் நூற்றா ண்டின் இறுதிப் பாகத்தில், சோழர் கள் இலங்கை மீது படையெடுத்து, அநுராதபுர அரசைக் கைப்பற்றி, பொலநறுவையை தமது இராசதானி யாக்கி சுமார் எழுபத்து ஏழு வரு டங்கள் இலங்கையை சோழ இராச்சியத்தின் ஒரு மாகாணமாக நிர்வகித்து ஆட்சி செலுத்தினர். இதன் விளைவுகளாக, கி.பி எட் டாம் நூற்றாண்டுகளிலிருந்து, சிங் கள இனக்குழு முனைப்படைந்து, ஒரு தனிப் பிரிவினராகத் தம்மை அடையாளப்படுத்துவதை வரலாறு காட்டி நிற்கின்றது. அதேபோல, எழுபத்து ஏழு வருட சோழ மன்னர் களின் ஆதிக்கம் இலங்கையில் இரு ந்ததன் விளைவாக இலங்கை வர லாற்றில் தமிழும், சைவமும், தமி ழ்ப் பண்பாடும் ஒன்று சேர்ந்த ஒரு தனி இனமாகத் தமிழர் முக்கியத் துவம் பெறுகின்றனர். தமிழ் நாட் டில் பௌத்தமதம் நிலைகுலைந்து போகின்ற ஆபத்தை நோக்கிய மகாநாம தேரர், இலங்கையிலும் அவ்வாறான ஒரு நிலை வந்துவிடக் கூடாது என்ற காரணத்தினாற் போலும், எல்லாள மன்னன் சோழநாட்டில் இருந்து வந்து அநுராதபுர அரசைக் கைப்பற்றியதாக, தீபவங்ஸ் நூலில் குறிப்பிடப்படாத நிகழ்வை விரிவு படுத்திக் கூறியிருக்க வேண்டும். இதன் உள்நோக்கம், இலங்கை யிலும், தமிழ்நாட்டு மன்னர்களால் சைவம் முதன்மைப்படுத்தப்பட்டு, பௌத்த மதம் புறந்தள்ளப்பட்டு விடுமோ என்ற பீதி காரணமாக எல்லாள மன்னனை ஒரு அந்நிய னாகக் காட்ட மாகாநாம தேரர் முயன் றுள்ளார் போலத் தெரிகின்றது.

மகாவம்ச நூலுக்குப் பின்னர் கி.பி. எட்டாம் நூற்றாண்டுகளுக் குப் பின்னர் வருகின்ற பாளி, சிங் கள நூல்களும், குறிப்பாக, வங் ஸத்தப்பகாசினி, ஸத்தர்மஸங் காரய ராஜாவலி, பூஜாவலி, சூள வம்சம் போன்றவையும், நவீன கால சிங்கள வரலாற்று ஆசிரியர் களால் எழுதப்பட்ட நூல்களும், பௌத்தம் சிங்களம் என்ற ஒரு குறுகிய வட்டத்தினுள் நின்று கொண்டு அநுராதபுர இராச்சிய வரலாற்றை, முழு இலங்கைக் குமான வரலாறாக எழுத முனைந் ததன் விளைவே தமிழர் பற்றிய, தமிழ் மன்னர் பற்றிய உண்மை யான வரலாறுகள் வெளிக் கொண ரப்படாமைக்கு முக்கிய காரணங் களாகின்றன.

மேற்கூறப்பட்ட நவீனகால வரலாற்று ஆசிரியர்களின் இவ்வா றான போக்கிற்கு எடுத்துக் காட் டாகப் பின்வருவனவற்றை உதார ணமாகக் காட்டலாம். சிங்களத் தேசியவாத உணர்வினால் கவரப் பட்ட நவீனகால வரலாற்றாசிரி யர்கள், எல்லாளன் துட்டகாமினியி டையே நடந்த போரினை, மகாநாம தேரரின் கருத்துக்கும் அப்பால் சென்று, சிங்கள மக்கள் மத்தியில் தமிழருக்கு எதிரான உணர்வைத் தூண்டும் வகையில், அவ்வரலாறு களைத் திரிபுபடுத்தி, தமது விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப எழுதி யுள்ளமையைக் காணமுடிகின்றது,

உதாரணமாக, சிறந்த வரலாற்று அறிஞரான பரணவிதான, எல்லாள னுக்கும் துட்டகாமினிக்கும் இடை யில் நடைபெற்ற அரச அதிகாரத் துக்கான போரை, ஒரு சிங்கள விடுதலைப் போராட்டத்திற்கான, அந்நியருக்கெதிரான போராகத் திரித்து எழுதியிருக்கின்றார்.

ஒரு சிங்கள மன்னன், தன் எதிரிக்குச் சமாதி நிறுவி, எல்லோ ரையும் அச்சமாதியை வழிபடு மாறு கட்டளையிட்டிருக்கின்றான். எதிரியான ஒரு தமிழ் மன்னனுக் குச் சமாதி நிறுவி எல்லோரையும் வழிபடுமாறு ஒரு சிங்கள மன்னன் எங்ஙனம் கட்டளையிடுவான் என்று கூட வரலாற்று அறிஞரான பரணவிதானவினால் உணரமுடியா மல் போய்விட்டது.

இன்றுவரை ஒரு சிங்கள மன் னன் அவ்வாறு ஒரு தமிழ் மன்ன னைக் கௌரவித்ததாக இலங்கை வரலாற்றிலே இல்லை. அவ்வாறான புகழ்மிக்க செயலை துட்டகாமினி செய்திருக்கின்றான். தமிழரை அந்நியர், அல்லது சிங்கள மக்க ளின் எதிரிகளெனத் துட்டகாமினி நினைத்திருந்தால், அவ்வாறு அவ னால் செய்திருக்க முடியுமா? அல்லது மகாநாமதேரர்கூட தமிழர்களை இனரீதியாகப் பார்த்திருந்தால் அவ்வா றான ஒரு செய்தியை மகாவம்சத் தில் சேர்ந்திருக்க முடியுமா?

(தொடரும்)

சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயமும் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவமும்

கலாநிதி
க. தவலிங்கம்,
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு

இத் தேர்தல் முடிவுகள், எல்லை நிர்ணய ஆணைக்குழு குறிப் பிட்டதுபோல் சில முடிவுகளைத் தரவில்லை. ஆணைக்குழு எதிர் பார்த்தது போல் அப்புத்தளைத் தொகுதியில் தமிழர் வெற்றி பெறாது சிங்களவர் வெற்றி பெற்ற தும் பண்டாரவளைத் தொகுதியில் சிங்களவர் வெற்றி பெறாது தமி ழர் வெற்றி பெற்றதும் மட்டக்களப் புத் தொகுதியில் தமிழர் வெற்றி பெறாது முஸ்லிம் உறுப்பினர் வெற்றி பெற்றதும் 70% சிங்க ளவரைக்கொண்ட அளுத்நுவர தொகுதியில் தமிழர் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத் தேர்தலில் ஊர்காவற் றுறை தேர்தல் தொகுதியில் இல ங்கை அரச சபை அங்கத்தவராக இருந்த சட்டத்தரணி வைத்திலிங் கம் துரைசுவாமி, காங்கேசன் துறை தேர்தல் தொகுதியில் இல ங்கை அரச சபை அங்கத்தவராக இருந்த செனட்டர் சுப்பையா நடே சன், யாழ்ப்பாணம் தேர்தல் தொகு தியில் இலங்கை அரச சபை அங் கத்தவராக இருந்த சட்டத்தரணி சேர் அருணாசலம் மகாதேவா ஆகியோர் தோல்வியுற்றனர். இத்தேர்தல் ஊடாக சட்டத்தரணி எஸ்.ஜே. வி. செல்வநாயகம் அர சியலுக்குள் நுழைந்தார். இத் தேர் தலில் செனட்டர் சுப்பையா நடே சன் மற்றும் சேர் அருணாசலம் மகாதேவா ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட் டமை குறிப்பிடத்தக்கது.

எல்லை நிர்ணய ஆணை க்குழு குறிப்பிட்டதுபோல்ஒவ்வொரு சமூகத்திற்கும் கிடைக்க வேண் டிய அங்கத்தவர்கள் எண்ணிக் கையையும் தேர்தலில் கிடைக் கப்பெற்ற அங்கத்தவர்கள் எண் ணிக்கையையும் ஒப்பிடும்போது அட்டவணை - 4இல் காட்டப்பட் டது போல் அமைந்திருந்தது.

யில் பிரிக்கப்பட்டதால் இவ் வேறு பாட்டை மாகாண அடிப்படையில் பார்ப்பதே சிறந்ததாகும். எனவே இதனை மாகாண அடிப்படையில் பார்க்கும்போது சிங்களவர்கள் கூடுதலான அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதும் இந்தியத் தமிழர் கள் குறைந்த அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதும் முஸ்லிம்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் கிடைக்க வேண்டிய அங்கத்துவம் கிடைத்துள்ளதையும் காணலாம்.

இந்தியர் சார்பில் அளுத்நுவர தொகுதியில்டி. இராமனுஜம், பதுளைத் தொகுதியில் எஸ். எம். சுப்பையா, நுவரெலியா தொகு தியில் எஸ். தொண்டமான், தல வாக்கலைத் தொகுதியில் சி.வி. வேலுப்பிள்ளை, கொட்டகலைத் தொகுதியில் கே. குமாரவேலு, நாவலப்பிட்டித் தொகுதியில் கே. இராசலிங்கம், மஸ்கெலியாத் தொகுதியில் ஜி. ஆர். மோத்தா ஆகிய ஏழுபேரும் தெரிவு செய்ய ப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தேர்தலில் 3,048,145 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இவர்களுள் 56.1 சதவீதமானோர் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். ஓர் உறுதி யான அரசாங்கத்தை அமைப்பதற் குப் போதுமான ஆசனங்களை எக் கட்சியுமே பெறவில்லை. இத் தேர் தலின்போது 751,432 (36.81%) வாக்குகளைப் பெற்று 96 ஆசனங் களில் 42 ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சி வென்றெடுத்தது. ஐக்கிய தேசியக் கட்சி அதிகமான ஆசனங்களைப் கைப்பற்றியதனால் ஏ.ஈ. குணசிங்க, சி. சிற்றம்பலம், சி. சுந்தரலிங்கம் போன்றவர் களை இணைத்துக் கொண்டு அது ஆட்சியை அமைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் டீ. எஸ்.சேனநாயக்க இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின்

அட்டவணை-4

கிடைக்கவேண்டிய அங்கத்தவர்கள் எண்ணிக்கை	சிங்களவர்	இலங்கைத் தமிழர்	இந்தியர் (முஸ்லிம் தவிர)	முஸ்லிம்	தீர்மானிக்க முடியாத மற்றும் ஏனைய இனத்தவர்	மொத்தம்
நாட்டின் (1946ஆம் ஆண்டு) சனத்தொகை அடிப்படையில்	66	12	10	6	1	95
மாகாண மட்டத்தில்	61	13	8	6	7	95
1947ஆம் ஆண்டுத்தேர்தல் முடிவுகள்	68	13	7	6	1	95

நாட்டின் (1946ஆம் ஆண்டு) சனத்தொகை அடிப்படையில் பார்க்கும்போது சிங்களவர்களும் இலங்கைத் தமிழர்களும் கூடுத லான அங்கத்துவத்தைப் பெற்றி ருப்பதும் இந்தியத் தமிழர்கள் குறைந்த அங்கத்துவத்தைப் பெற் றிருப்பதும் முஸ்லிம்களுக்கு கிடை க்க வேண்டிய அங்கத்துவம் கிடைத்துள்ளதையும் காணலாம். தொகுதிகள் மாகாண அடிப்படை

என்றே கொள்ளப்பட்டது.

முதலாவது பாராளுமன்றத் தின் உறுப்பினர்கள் 1947 ஒக் டோபர் மாதம் 14ஆம் திகதி காலி முகத்திடலில் அமைந்துள்ள பாரா ளுமன்றக்கட்டடத்தில் (தற்போது ஜனாதிபதி செயலகம்) சந்தித்துக் கொண்டார்கள்.

இதே கட்டடத்தில் முதலாவது பாராளுமன்றத்தின் சம்பிரதாய பூர்வமான அமர்வு 1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி இடம்பெற்றது.

முதலாவது பாராளுமன்றத்தின் பிரதமர் திரு. டீ. எஸ்.சேனநாயக்க

பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் அரசாங்கம் அமைத்த ஒரு வருடத்திற்குள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர் ந்து ஜீ.ஜீ. பொன்னம்பலத்திற்கும் அமைச்சர் பதவி வழங்கினார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட் சியைச் சேராத அங்கத்தவர்களும் முதலாவது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்ததனால் இது வொரு "கூட்டு அமைச்சரவை"



அரசமாளிகையின் (தற்போதைய ஜனாதிபதி மாளிகை) தற்போதையதோற்றம்

ளும் பிரதமரும் அரசமாளிகை யில் (Queen's House) (தற் போதைய ஜனாதிபதி மாளிகை) 1947ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள்.

முதலாவது பாராளுமன்றத் தின் அமைச்சரவையில் 14பேர் அமைச்சர்களாக இருந்தனர். அதில் வவுனியா தொகுதி பாராளு மன்ற உறுப்பினர் சி. சுந்தர லிங்கம் வர்த்தக மற்றும் வணிகத் தொடர்பு அமைச்சராகவும் மன்



பாராளுமன்றக்கட்டிடம்
(தற்போது ஜனாதிபதி செயலகம்)

இத்தேர்தலில் மற்றைய கட்சி களும்சிறுபான்மையினரும்இணை

No. 42. Queen's House. Colombo.

அரசமாளிகை

ந்து ஒரு கூட்டரசாங்கத்தை அமை க்க கிடைத்தவாய்ப்பு அக் கட்சிக ளின் கொள்கை முரண்பாடுகள் காரணமாக நழுவிப்போய்விட்டன.

முதலாவது பாராளுமன்றத் தின் அமைச்சரவை உறுப்பினர்க

னார் தொகுதி பாராளுமன்ற உறுப் பினர் சி. சிற்றம்பலம் தபால் மற்றும் தந்திப்போக்குவரத்து அமைச்சராகவும் மற்றும் யாழ்ப் பாணத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜீ. பொன் னம்பலம் கைத்தொழில் மற்றும் மீன்பிடி அமைச் சராகவும் இருந்தனர்.

இவ் அமைச்சரவையில் இள நிலை/பிரதி (junior/deputy) அமைச்சர் பதவிகள் இருக்கவி ல்லை. இளநிலை அமைச்சர் கள், பாராளுமன்றச் செயலாளர் கள் என அழைக்கப்பட்டனர். பாராளுமன்றச் செயலாளார்க ளாக 9 பேர் நியமிக்கப்பட்டனர். அதில் கல்குடாத் தொகுதி பாரா ளுமன்ற உறுப்பினர் வீ. நல்லையா சுகாதார அமைச் சின் செயலாளராக கடமையாற்றி னார்.

முதலாவது அமைச்சரவை யில் ஜோர்ஜ் ஈ. டீ. சில்வா கைத்தொழில் மற்றும் மீன்பிடி அமைச்சராகவிருந்தார். தேர்தல் வழக்கில் அவரது ஆசனம் பறி போனதால் அவரின் இடத்தி ற்கு ஜீ.ஜீ. பொன்னம்பலம் நியமிக்கப் பட்டார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையும் (1950), பரந் தன் இரசாயனத் தொழிற்சாலை யும் (1954) ஜீ.ஜீ. பொன் னம்பலம் கைத்தொழில் அமைச் சராகவிருந்த காலத்தில் ஆரம்பி க்கப்பட்டவையாகும்.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை சுதந்திர மடைந்த பின்பும் இதே பாராளும ன்றமே இலங்கையில் தொடர்ந் தும் செயற்பட்டது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி சுதந்திரச் சதுக்க த்தில் விஷேடமாக அமைக்கப் பட்ட மண்டபத்தில் இளவரசர் ஹென்றி கோமகனார் (Prince Henry, Duke of Glouces ter) மற்றும் முதலாவது பாரா ளுமன்றத்தின் பிரதமர் டீ. எஸ்.சேனநாயக்க முன்னிலை யில் சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(தொடரும்...)

"அரசைக் கண்டு அஞ்சப்போவதில்லை"

பிரதமரின் அரசியலமைப்புக்கு ஏற்ப சபாநாயகர் செயற்பட முடியாது

கூட்டு எதிரணி எம்.பி.செஹான் தெரிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் நாட்டில் இயற்றப்பட்ட அரசியலமைப்பின் பிரகாரம் பதவி வகிக்க வேண்டுமே தவிர ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் பிரதமரால் எழுதப்பட்ட அரசியலமைப்புக்கு ஏற்ப செயற்பட முடியாது என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் அபிலாசைகளையே நாம் பாராளுமன்றத்திற்கு கொண்டு சென்றோம். அங்கு மக்களின் விருப்பங்களே நிராகரிக்கப்பட்டன. பாராளுமன்ற சம்பிரதாயங்களை காரணம் காட்டி சபாநாயகர், எதிர்க்கட்சி தலைவர் பதவியை எமக்கு வழங்க முடியாது என்றும் இது பாராளுமன்ற கோட்பாடுகளுக்கு முரணானது என்றும் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அரசாங்கம் இரகசியமாக தேசிய சட்டத்தில் மாற்றங்களை செய்துள்ளது. அரசாங்கத்தின் தேவைக்கு மாத்திரம் அரசியலமைப்பினை மாற்றும் போது ஏன் மக்களின் விருப்பத்திற்காக அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

ஐக்கிய சுதந்திர முன்னணியின் உரிமையை துறந்து தான் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற வேண்டும் என்ற அவசியம் எமக்கு கிடையாது. இதற்கு மக்களே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் பதிலடி கொடுப்பார்கள்.

அத்துடன் தேசிய அரசாங்கமானது கடந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தினையும் மறந்து விட்டது.

எனினும் இவ்வாறு சுமத்தப்படும் குற்றங்கள் ஏதும் இதுவரை காலமும் முழுமை பெறவில்லை. ஆகவே அரசாங்கத்தின் இதுபோன்ற செயற்பாடுகளைக் கண்டு ஒரு போதும் அஞ்சப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கீத் நொயரைக் கடத்தியவர்களை மகிந்தவுக்கு நன்றாகத் தெரியும்

அஜித் பெரேரா தகவல்

(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயரை கொலை செய்யாமல் காப்பாற்றியதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி கூற வேண்டும் என்று பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

"கீத் நொயரைக் கடத்திச் சென்றவர்கள் அவரைக் கொலை செய்யவிருந்த நிலையில், மகிந்த ராஜபக்ஷ தலையிட்டுத் தான், அவரைக் காப்பாற்றினார். அவர் தலையிட்டதற்காக நாங்கள் நன்றி கூற வேண்டும்.

கீத் நொயர் உயிரைப் பாதுகாப்பதில் சபாநாயகர் கரு ஜெயசூரியவும் முக்கிய பங்காற்றினார்.

அதேவேளை, கீத் நொயரைக் கடத்திச் சென்றவர்கள் யார் என்பது மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றாகவே தெரியும்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அது தான் அவர்களின் காலத்து ஊடக சுதந்திரம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த போட்டியிட்டால் ஆதரவு

சு.க.மாற்று அணி டிலான் கூறுகிறார்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியுமென்றால் எவ்வித வாதங்களும் இன்றி அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாற்று அணி நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேநேரம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷவின் ஆசிர்வாதத்துடன் அந்த தேர்தலில் களமிறங்கினால் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா போட்டியிட்டால் ஒத்துழைப்பு வழங்கப்படுமா என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே டிலான் இவ்வாறு பதிலளித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு நிலைப்பாட்டில் போட்டியிட்டால் சந்திரிகாவுக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என்றும் டிலான் பெரேரா தெரிவித்தார். (இ-7)

செய்தித்துளிகள்

மாணவன் முதலாமிடம்

(கொழும்பு)

கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் சு.அனந்த நாராயணன் சர்மா இவ் வருடம் நடைபெற்ற தேசிய தமிழ் மொழித் தினப்போட்டியில் தனி இசைப் பிரிவு-5 இல் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (இ

முஸ்லிம் பாடசாலைகளுக்கான விடுமுறை தினத்தில் மாற்றம்

(கொழும்பு)

முஸ்லிம் பாடசாலைகளுக்கான 2 ஆம் தவணை விடுமுறை தினத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி 2 ஆம் தவணைக்கான விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஹஜ் பெருநாளை கருத்திற் கொண்டு, அந்த விடுமுறை தினத்தை மாற்றம் செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில் நேற்று முதல் விடுமுறை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை 3 ஆம் தவணைக்காக முஸ்லிம் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ-7)

வெலிக்கடை சிறையிலுள்ள 16பேருக்கு அவசர இடமாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் சேவையாற்றிய 16 பேருக்கு அவசர இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. சிறு சிறு குற்றங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களே இவ்வாறு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர். உதவிசிறைச்சாலை அதிகாரி, பிரதான ஜெய்லர் மற்றும் சிறைச்சாலை காவலர்கள் ஆகியோருக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நீதி மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சின் சிபார்சின்பேரில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

கொழும்பு - அட்டன் பிரதான வீதியில் போக்குவரத்துத் தடை

(கொழும்பு)

கொழும்பு - அட்டன் பிரதான வீதியில் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். மலையகத்தில் தொடர்ந்தும் சீரற்றகால நிலை நிலவுகின்றதால் பல்வேறு பகுதிகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

இலங்கை நாணய மதிப்பில் மீளச்சரிவு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு மீண்டும் வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. நேற்று முன்தினம் தொடர்ந்து ஆறாவது நாளாக, டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு சரிவைச் சந்தித்தது.

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி நேற்று முன்தினம் 161.55 ரூபாவாக அதிகரித்துள்ளது. கடந்த ஆறு நாட்களில், அமெரிக்க டொலரின் மதிப்பு 23 சதங்களால் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ஒகஸ்ட் 16ஆம் திகதியுடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 6.62 ரூபாவினால் வீழ்ச்சியடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஆவணி மாத இராசி பலன்கள்

17.08.2018-16.09.2018

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

கண்டகச் சனிக்குப் பரிகாரம் தேவை!

விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசி நாதன் புதன், ராகுவோடு இணைந்து தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். "ராகுவைப் போல கொடுப்பவனுமில்லை" என்பது பழமொழி. அப்படி கொடுக்கக்கூடிய ராகுவோடு புதன் இணைந்திருப்பதால் பொருளாதார நிலை சிறப்பாக இருக்குமென்றே சொல்லலாம்.

இருப்பினும் கண்டகச் சனியின் ஆதிக்கம் ஒருபுறம், ராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கி சர்ப்ப தோசத்தை உருவாக்குவது மற்றொருபுறமாக உள்ளது. இந்த இரண்டு கிரக தோசங்களின் காரணமாக பல நல்ல வாய்ப்புகள் வந்தும் அதை உபயோகப்படுத்திக்கொள்ள இயலாமல் போகலாம். கையிலிருக்கும் தொகை செலவழிந்த பிறகே, மறு தொகை உங்கள் கைக்கு கிடைக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் இடையூறு சக்திகள் அதிகரித்தாலும் குரு பார்வை ஒன்றால் காரியங்கள் எப்படியாவது கடைசி நேரத்தில் கைகூடி விடும்.

துன்பங்களைத் தூளாக்குவது குருவின் பார்வைதான். எனவே பார்க்கும் குருவைப் பலப்படுத்த ஆலயங்களில் உள்ள குருவை வழிபடுவதோடு, அறுபத்து மூவர் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது. இது ஆவணி மாதம் என்பதால் சதுர்த்தி நாளில் விரமிருந்து கற்பக விநாயகரை வழிபடுங்கள். ராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதால் நாகதோச நிவர்த்திப் பரிகாரத்தையும் உங்களுக்கு யோகம் தரும் நாளில் அனுகூல ஸ்தலங்களில் செய்வது நல்லது. சனி ஆதிக்கம் இருப்பதால் ஒவ்வொரு சனிக்கிழமையும் சனிபகவானுக்கு அர்ச்சனை செய்து வழிபட்டு வருவதோடு காகங்களுக்கு எள் கலந்த அன்னம் வைப்பது உகந்தது.

இத்தனை பரிகாரங்களையும் செய்யவேண்டுமா? என்று நீங்கள் நினைக்கலாம். தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றுகிற ஆற்றல் வழிபாட்டிற்குத் தான் உண்டு. எனவே துயரங்களின் அளவு குறைய துணைபுரியும் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

சனி வக்கிர நிவர்த்தி காலம்!

இதுவரை வக்கிர இயக்கத்தில் இருந்த சனிபகவான் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிப் பலம் பெறுகிறார். எனவே கண்டகச் சனியின் ஆதிக்கம் வலுவாகிறது. குரு வீட்டில் சனி இருப்பதால் பெரியளவில் பாதிப்புகள் இல்லையென்றாலும், அதன் பார்வை பலத்தால் சில நல்ல காரியங்கள் நடைபெறுவதில் தாமதம் ஏற்படும். தொழிலில் பிறரை நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்கக் கூடாது. தொகை வருவதில் தடைகள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு சொத்துக்களை விற்கும் சூழ்நிலையும் தொழிலைக் கைமாற்றி விடும் சூழ்நிலையும் ஏற்படலாம்.

புதன் பெயர்ச்சிக் காலம்!

உங்கள் இராசிக்கும் 4 ஆம் இடம் எனப்படும் சுக ஸ்தானத்திற்கும் அதிபதி புதன். அப்படிப்பட்ட புதன் ஓகஸ்ட் 28 ஆம் திகதி சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். புத ஆதித்ய யோகம் உருவாகும். இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். மண்ணாளும் தலைவர்களின் பழக்கத்தால் மகத்தான காரியங்கள் பல செய்வீர்கள். பொன் வாங்கும் யோகமும் பொருள் வாங்கும் யோகமும் உண்டு. விலகி இருந்த உடன் பிறப்புகள் இனி அருகில் வந்து பழகுவர்.

அதேநேரத்தில் செப்டெம்பர் 3 ஆம் திகதி புதன் அஸ்தமனமடைகிறார். அப்பொழுது ஆரோக்கியக் குறைபாடு ஏற்படும். ஆதாயம் வருவதிலும் தடைகள் அதிகரிக்கும்.

பெருமாள் வழிபாட்டால் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். இக்காலத்தில் தாயின் ஆதரவும் தக்க விதத்தில் கிடைக்கும். கல்வி வளர்ச்சி உண்டு.

சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்!

மாதத் தொடக்கத்தில் நீச்சம் பெற்ற சுக்கிரன் ஓகஸ்ட் 28 ஆம் திகதி தன் சொந்த வீடான துலாம் இராசிக்கு வருகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். எப்போதும் இல்லாத அளவிற்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். குரு-சுக்கிர சேர்க்கை இருப்பதால் தொழில் முன்னேற்றம் உண்டு. வருமானம் திருப்திகரமாக இருக்கும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும்.

செவ்வாய் வக்கிர நிவர்த்தி

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் வக்கிரம் பெற்றிருக்கும் செவ்வாய், செப்டெம்பர் 6 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்டலாம். பயணங்களிலும் இடையூறுகள் உருவாகும். பயணங்களால் தொல்லை, பால்ய நண்பர்களோடு பகை, மருத்துவச் செலவு அதிகரிப்பு, உடன்பிறப்புகளின் உறவில் விரிசல், இடமாற்றச் சிந்தனை, உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகுதல் போன்ற சம்பவங்கள் நிகழக் கூடிய நேரமிது. எதிலும் கவனம் தேவை. இம்மாதம் சனிக்கிழமைதோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டிய மாதமாகும். குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கலாம். அருகிலிருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே நன்மை கிடைக்கும். வருவாய் எவ்வளவு வந்தாலும் வந்த மறு நிமிடமே செலவாகிவிடும். வைத்தியச் செலவுகள் வாடிக்கையாகிவிடும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதி கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பணிபுரியும் பெண்கள் பணிவும் துணிவும் ஏற்று நடப்பது நல்லது. நீண்ட தூரத்திற்கான இடமாறுதல் உருவாகலாம். வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதே சிறந்தது. சனிக்கிழமை அன்று வெற்றிலை மாலை சூட்டி அனுமனை வழிபடுவதன் மூலம் விருப்பங்கள் வெகு எளிதில் நிறைவேறும்.

புதிய திருப்பங்கள் ஏற்படும்!

விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் சகாய விரயாதிபதியான புதனும், ராகுவும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். விரயாதிபதி பலம்பெறும் இந்த நேரத்தில் விரயங்கள் தானே அதிகரிக்கும். அவற்றை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு என்றாலும், அவ்வப்போது மனத் தளர்ச்சியும் ஏற்படலாம். அதற்குக் காரணம் ராகு-கேது ஆதிக்கத்தில் உருவாகும் சர்ப்பதோசம் தான். அதில் இருந்து விடுபட ஜாதகத்தையும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் குடும்ப உறுப்பினர்களின் ஜாதகங்களையும் அலசி ஆராய்ந்து, அதற்கு ஏற்ப அனுகூல நாளில் யோகம் தரும் தலங்களில் முறையாக பரிகாரங்களைச் செய்ய வேண்டும்.

ஜீவன ஸ்தானாதிபதி சனி 6 இல் வக்கிர இயக்கத்தில் இருப்பதாலும் குரு பகவான் 4 இல் அமர்ந்து அர்த்தாஷ்டம குருவாக இருப்பதாலும் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. விவாகப் பேச்சுகள் முடிவுக்கு வருவது போல் இருந்து கைநழுவிச் செல்லலாம். எந்த ஒரு தகவலையும் மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். விருப்ப ஓய்வு பெறலாமா? என்று சிந்திப்பீர்கள். குலதெய்வ வழிபாடும், செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாடும் ஆவணி சதுர்த்தியில் ஆனைமுகப்பெருமான் வழிபாடும் அனைத்துத் தடைகளையும் அகற்றும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சனி வக்கிர நிவர்த்தி காலம்!

ஓகஸ்ட் 20 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 7, 8 இற்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதி வக்கிர இயக்கத்தில் இருக்கும் போது நன்மைகளைச் செய்யும். அதே நேரத்தில் சப்தமாதிபதியாகவும் சனி இருப்பதால் வக்கிர இயக்கத்தில் இருக்கும் போது குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கலாம். அதேநேரத்தில் சனியின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். ஆனால் அதேசமயத்தில் அஷ்டமாதிபதி பலம் பெறுவதால் தொழிலில் சில இழப்புகளைச் சந்திக்க நேரிடும். எனவே நன்மையும் தீமையும் சேர்ந்து நடக்கும் நேரமிது.

புதன் பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 12 இற்கு அதிபதியானவர் புதன். சகாய ஸ்தானாதிபதியான புதன், தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தனவரவு தாராளமாக இருக்கும். மனதளவில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். ஊர் மாற்றம், எதிர்பார்த்தபடி அமையும். அதே நேரம் செப்டெம்ப்ர் 3 ஆம் திகதி புதன் அஸ்தமனமாகிறார். செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். இதன் விளைவாக வழக்குகள் சாதகமாக முடியும். பூர்வீகச் சொத்துகளை பாகப்பிரிவினை செய்யும் முயற்சி பலன்தரும்.

சுக்கிர பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி தனது சொந்த வீடான துலாம் இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். சுகாதிபதி சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சுகங்களும், சந்தோசங்களும் வந்து சேரும். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். வாழ்க்கைத் துணை வழியே நன்மை சேரும். உதிரி வருமானங்கள் பெருகும். வீட்டுப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சி வெற்றியாகும். சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

செவ்வாய் வக்கிர நிவர்த்தி

செப்டெம்பர் 6 ஆம் திகதி முதல் உங்களுக்கு யோகமான காலமாகும். காரணம் அன்றைய தினம் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய், வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறும் நேரம் இது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். தொழில் வளர்ச்சி மேலோங்கும். எதிரிகள் விலகுவர். இலாபம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். வீடுகட்டும் அல்லது வாங்கும் முயற்சி கைகூடும். உடன் பிறப்புகள் உங்களோடு இணைந்து செயற்படுவர். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணையலாம். புதிய பாதை புலப்படும். புகழ் கூடும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியில் எதிர்பார்த்தபடியே வெற்றி கிடைக்கும். அரசியல் துறையில் உள்ளவர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கும்.

இம்மாதம் ஆவணி சதுர்த்தியில் ஆனைமுகப்பெருமானையும் செவ்வாய்தோறும் முருகப் பெருமானையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் அதிக உழைப்பும், ஆதாயக் குறைவும் ஏற்படும். விழிப்புணர்ச்சி இல்லையென்றால் விரயங்களே அதிகரிக்கும். பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் உங்களிடமே திரும்பி வரும். செப்டெம்பர் 6 ஆம் திகதி வரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரமாகும். அன்றைய தினம் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாவதால், அதன் பிறகு உங்கள் எண்ணங்கள் ஈடேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பிள்ளைகளின் வழியில் நடைபெற வேண்டிய சுப காரியங்கள் சிறப்பாக நடைபெறும். தாய்வழி ஆதரவு உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு மாதக் கடைசியில் ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். சக ஊழியர்களுடன் ஏற்பட்ட சண்டை சச்சரவுகள் சமரசமாகும். சதுர்த்தி விரதம் சங்கடம் தீர்க்கும்.

(தொடரும்)

முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையும் முடிக்க வேண்டும் என்ற கட்டாயமும் முடியாத காரியத்தையும் முடிக்க வைக்கும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் எடுத்துக்காட்டான அரசியல் தலைவர்

இந்தியாவின் பிரதமராக இருந்த அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் நேற்று முன்தினம் காலமானார்.

தனது 93ஆவது வயதில் காலமாகிய வாஜ்பாய் அவர்கள் இந்தியப் பிரதமர்களாக இருந்தவர்களின் வரிசையில் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர்.

வாஜ்பாய் அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்தபோது அவரின் நேர்மையை, நியாயத்தை, மனிதாபிமானத்தை உலகம் அறிந்து கொண்டது.

இந்துத்துவக் கொள்கையைக் கொண்ட பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவராக வாஜ்பாய் அவர்கள் இருந்தாராயினும் அவரின் ஆட்சியில் மதசார்பற்ற போக்கை அவர் கடைப் பிடித்திருந்தார் என்பதுதான் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

எதிலும் நிதானமான போக்கை உடைய வாஜ்பாய் அவர்கள் மிகச்சிறந்த பேச்சாளர், மிகச்சிறந்த கவிஞர் என்ற பெருமைக்குரியவர்.

காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து இந்தியாவின் ஆட்சியை பாரதிய ஜனதாக் கட்சி கைப்பற்றுவதன் பின்னணியில் வாஜ்பாய் அவர்களின் பேச்சாற்றலும் நேர்மைத்திறனும் முக்கிய வகிபங்கைக் கொண்டிருந்தது.

தவிர, இந்தியாவின் பிரதமராக வாஜ்பாய் இருந்த காலத்தில், இந்திய தேசத்தில் ஊழலற்ற அரசியல் என்ற கலாசாரத்தைக் கொண்டு வந்தார்.

அண்டை நாடான பாகிஸ்தான், இந்தியாவின் எல்லைப் பிரதேசமான கார்கில் மீது யுத்தத்தை ஆரம்பித்தபோது, அதனை முறியடித்த பெருமையும் அன்றைய பிரதமர் வாஜ்பாயையே சாரும்.

கார்கில் மீது நடந்த யுத்தத்தை முறியடித்து பாகிஸ்தானுக்குப் பதிலடி கொடுத்த பெருமை வாஜ்பாய்க்கு உண்டென்பதற்கப்பால்,

அந்த யுத்தத்தில் இந்தியா வெற்றி பெறுவதற்கு மூலகாரணம் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இந்திய தேசத்தின் ஒட்டுமொத்த ஆதரவையும் பெற்றுக் கொண்டதுதான்.

ஆம், கார்கில் யுத்தத்தை வெற்றி கொள்ள அன்றைய பிரதமர் வாஜ்பாய் தலைமையில் இந்தியாவின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர்ந்தன.

இந்தியாவின் விளையாட்டு வீரர்கள், திரைப்படத்துறையினர் என அனைவரும் ஒன்றுபட்டு பாகிஸ்தானின் தாக்குதலை முறியடித்து வெற்றி கொள்ளப் பேருதவி புரிந்தனர்.

இதுமட்டுமன்றி இந்திய தேசத்தின் அன்றைய அரசு மேற்கொண்ட பதிலடி யுத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள்கூட விமர்சிக்க முடியாத அளவில், கார்கில் யுத்தத்தை மிகச் சிறப்பாக நடத்தி முடித்த பெருமை அன்றைய பிரதமர் வாஜ்பாயை சாரும்.

இவையாவற்றுக்கும் மேலாக முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ஒரு பிரமச்சாரி. பிரமச்சாரிகளின் ஆட்சியில்தான் அரசியல் தூய்மையாக இருக்கும் என்பதை நிரூபித்தவர்களில் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த கர்மயோகி காமராஜரின் வரிசையில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களும் முதன்மைப்படுகிறார்.

இந்தியாவின் பிரதமராக வாஜ்பாய் இருந்த காலத்தில் ஈழத் தமிழர்கள் இந்தியா எங்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையோடு இருந்தார்கள் என்பதும் அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக வாஜ்பாய் நடந்து கொண்டார் என்பதும் அவர் மறைந்த இவ்வேளையில் நினைவுபடுத்தற்குரியவை.

மகிந்த 10 வருடங்களில் பெற்றதைவிட இந்த அரசு 3 வருடங்களில் அதிக கடன்

வாசுதேவ எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம்தோற்றுவிக்கப்பட்டு நேற்றுடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இதுவரை காலமும் அரசாங்கம் கடந்த அரசாங்கம் முன்னெடுத்த அபிவிருத்தி பணிகளையே பூர்த்தி செய்துள்ளது. புதிதாக எவ்வித அபிவிருத்திகளையும் செயற்படுத்தவில்லை என கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தை குற்றஞ்சாட்டியே மூன்று வருடங்கள் கடந்தோடி விட்டன. மிகுதியாக உள்ள காலத்திலும் இந் நிலைமையே தொடரும். எவ்விதமான வேலைத்திட்டங்களும் இன்றி செயற்படுவதால் மக்களே தொடர்ந்து பொருளாதார ரீதியில் பாதிக்கப்படுவார்கள் என வாசுதேவ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் கபடத்தனமாக வீழ்த்தி, நல்லாட்சி என்ற பெயரில் ஆட்சியமைத்தனர். பெயரளவில் மாத்திரமே நல்லாட்சி பேணப்படுகினறது. மாறாக சர்வாதிகார போக்கே இடம்பெறுகின்றது. காலம் காலமாக ஜனநாயக ரீதியில் பெறப்பட்டு வந்த விடயங்கள் யாவும் கடந்த மூன்று வருட காலமாக போராட்டம், அழுத்தம் போன்ற வற்றின் ஊடாகவே பெற முடிந்துள்ளது.

ஒரு நாட்டில் காலத்திற்கு காலம் தேர்தல் இடம்பெற வேண்டும் என்பது மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் வழி முறையாக காணப்படுகின்றது. ஜனநாயக கோட்பாடு தொடர்பில் பேசும் தேசிய அரசாங்கத்தின் பார்வையில் தேர்தல் பிற்போடப்படுவது மக்களின் உரிமையினை மீறுவதாக தென்படவில்லை. எதிர்வரும் ஜனவரி மாதம் மாகாண சபை தேர்தல் இடம்பெறுவது சாத்தியமற்றது. ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே அரசாங்கத்தின் தற்போதைய நோக்கமாக காணப்படுகின்றது.

மூன்றுவருடத்தைநிறைவு செய்துள்ள அரசாங்கம் இதுவரையில் எவ்விதமான முறையான அபிவிருத்தி பணிகளையும் முன்னெடுக்கவில்லை. கடந்த அரசாங்கம் முன்னெடுத்த அனைத்து பாரிய அபிவிருத்திகளையே இந்த அரசாங்கம் முழுமைப்படுத்தியுள்ளது. ஆட்சி பொறுப்பினை ஏற்கும் போது பாரிய கடன்கள் மாத்திரமே காணப்பட்டன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகின்றார்.

கடந்த அரசாங்கம் பாரிய கடன்களை பெறுவதற்கான தேவைகள் அன்று காணப்பட்டன. குறுகிய காலகட்டத்தில் 30 வருடங்களாக இடம் பெற்ற யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டன. 2004ஆம் ஆண்டு இடம் பெற்ற சுனாமி தாக்கத்தினால் பாரிய இழப்புக்கள் நேரிட்டன. இதற்காக பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டதோடு மக்களும் மீள் குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறான சம்பவங்கள் ஏதாவது தேசிய அரசாங்கத்தின் மூன்று வருட கால ஆட்சியில் இடம் பெற்றதா? 10வருட கால ஆட்சியில் மகிந்த பெற்ற வெளி நாட்டு கடன்களை விட இன்று தேசிய அரசாங்கம் மூன்று வருட ஆட்சியில் அரச கடன்களை அதிகமாக பெற்றுள்ளது. மக்களின் மீதான வரிச்சுமை அதிகரிக்கும் போதெல்லாம் கடந்த அரசாங்கத்தின் கடன்களையே கேடயமாக பயன்படுத்தியது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த 2015ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி மக்களுக்கு பாரிய வாக்குறுதிகளை வழங்கியது.

ஆனால் இதுவரை காலமும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஏதும் முழுமைப்படுத்தப்படவில்லை. பொய்யான வாக்குறுதிகளின் மத்தியிலே இன்று மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தொடர்ந்து ஏதாவது ஒரு பிரச்சினைக்கும் போராட்டங்களுக்கும் மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

தொழிற்சங்கத்தினரது கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் போராட்டங்கள் தோற்றம் பெறுகின்றன.

நாளை என்ன போராட்டம் இடம் பெறுமோ? என்ற அச்சத்திலே மக்கள் தொழிலுக்கு புறப்படுகின்றனர். இதுவா நல்லாட்சி இந் நிலைமை இரண்டு வருட காலத்திற்குதொடரும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

உத்தியோகத்தர்கள் விடுதி அமைக்க 35 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு

அத்தியட்சகர் அச்சுதன் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

உத்தியோகத்தர்கள் விடுதி அமைப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டிருப்பதோடு இவ் வருடத்திற்கான நிதியாக 35 மில்லியன் நிதி கிடைக்கப் பெற்றிருப்பதாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வியாழக்கி

இலக்கியச் சுடர் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரபல சொற்பொழிவாளர் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் (குமிழ்நாடு) எதிர்வரும் 26.08.2018 அன்று நடைபெறவுள்ள இந்து இளைஞர் மாநாட்டில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

காலை அரங்கில் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம என்ற பொருளில் தனியுரை ஆற்றவுள்ளார்.

மாலை அரங்கில் மானுடத்திற்கு மகிழ்ச்சியும் ஏற்றமும் தருவதில் முந்தி நிற்பது தொண்டா? பக்தியா? என்ற பொருளில் இடம்பெறவுள்ள பட்டிமண்டபத்தில் நடுவராகப் பங்கேற்கவுள்ளார்.

இந்து இளைஞர் மாநாட்டை சர்வதேச இந்து இளைஞர பேரவை ஏற்பாடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

முமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம் பெற்ற இரத்த சுத்திகரிப்பு நிலைய திறப்புவிழா நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது வைத்தியசாலை வளாகத்தினுள் அமைந்துள்ள இரத்த சுத்திகரிப்பு நிலையம் மத்திய சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித வினால் திறந்து வைக்கப்பட்டமை எமக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அமைப்பு மற்றும் அமைவிடம் குறை நிறை ஆகியவற்றை மத்திய சுகாதார அமைச்சர் பார்வையிட வேண்டும் என்ற எண்ணம் எமக்கிருந்தது. அது தற்போது நிறைவேறியும் உள்ளது.

இதனைக்காரணம்காட்டி எமது குறைகள் மற்றும் தேவைகளை மத்திய சுகாதார அமைச்சரிடம் கோர முடியும். அமைச்சு மட்டத்தில் இப்படி ஒரு வைத்திய சாலை இருப்பது பலருக்குத் தெரியாது. நாம் இந்த இரத்த சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ முற்பட்டபோது கட்டடப் பிரச்சினை, ஊழியர்கள் மற்றும் வைத்தியர்கள் பற்றாக்குறை ஆகிய பிரச்சினைகள் இருந்தன. எல்லா சவால்களையும் தாண்டி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திறந்து வைக்கப்பட்டு அது இன்று பொதுமக்களின் பாவனைக்காக இயங்கவும் ஆரம்பித்துள்ளது. இதற்கு சகலருடைய பங்களிப்பும் உண்டு.

சிறிது காலத்தில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் திறந்து வைக்கப்படவுள்ள விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவையும் திறந்து வைப்பதற்கு தான் வருவேன் என சுகாதார அமைச்சர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

இவற்றைத் தவிர எமது வைத்தியசாலையில் ஊழியர்கள் விடுதி அமைப்பதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. அதற்கான இவ் வருட நிதியாக 35 மில்லியன் ரூபாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

அரசாங்க அதிபர் ஊடாக மத்திய அரசிடம் இருந்து எமக்கு இந்த நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கான கட்டட பணிகள் வெகு விரைவில் ஆரம்பமாக உள்ளது. நாம் திட்டமிடல் மற்றும் அமைவிடம், வரைவு ஆகியவற்றை பூர்த்தி செய்து அனுப்பியுள்ளோம். மழைகாலத்திற்கு முன்பாக ஊழியர்கள் விடுதியின் அத்திபாரப் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

அடுத்த வருடத்திற்கான நிதியை கோர வேண்டிய தேவை உள்ளது. மேலும் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவின் முதல் இரண்டு தளங்களின் பணிகள் நிறைவடைந்த நிலையிலும் லிப்ட் (மின் தூக்கி) வசதி பொருத்துவது தொடர்பாக எந்தவொரு முடிவும் கிடைக்காததனால் அதனை தற்போது திறந்து வைக்க முடியாத நிலை உள்ளது.

நாம் சுகாதார அமைச்சரிடம் எமது தேவைகளை நேரடியாக கோர நேரம் தடையாக இருந்தது. இருப்பினும் எழுத்து மூலமாக எமது கோரிக்கையை அமைச்சரிடம் முன்வைத்துள்ளோம்.

சிறிய ஊழியர் வட்டத்தைக் கொண்டு மிகச் சிறப்பாக வைத்தியப் பணியாற்றி வருவது மகிழ்ச்சியளிக்கின்றது என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (இ-30)

திருவெண்காட்டில் இன்று

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலயத்தின் இரண்டாம் நாள் மகோற்சவமாகிய இன்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் சொல்லருவி ச.லலீசன் அவர்களின் தெய்வீக உரை இடம்பெறவுள்ளது. (ம)

யாழ்.கிரிக்கெட் லீக்-2018

ஓல்ட் கோல்ஸ் அணியின் வெற்றி



ஏ.பி. விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.கிரிக்கெட் லீக் தொடருக்கான போட்டி ஒன்றில் ஓல்ட் கோல்ஸ் அணி பற்றீசியன்ஸ் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களை பெற்றது. துடுப்பெடுத்தாட்டத்தில் ரியூடர்-17, முரளி-35, தனு-17, டினேஸ்-24, நிதர்ஸன்-18, டார்வின்-16 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் சிறிகுகன்-03, ஜின்துஷன், நிரோஸன் தலா-02, திலீபன்-01, இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 18.5 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் மதுஸன்-40, திலீபன்-20, சிறிகுகன்-19, நிரோஸன் ஆட்டமிழக்காது-37, கஜேன்டிரன்-14 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் நோபேட்-03, டனிசீசியன், மைக்கல் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். (கு)

ஹாட்லியைற்ஸ் அணியின் வெற்றி

ஏ.பி. விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் யாழ்.கிரிக்கெட் லீக் தொடருக்கான சுற்றுப்போட்டியில் கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஒன்றில் ஹாட்லியைற்ஸ் அணி யாழ். ஜோனியன்ஸ் அணியை 2 இலக்குகளால் வெற்றிபெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜோனியன்ஸ் அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களை பெற்றது. சண்சஜன்-20, றஜீவ்-64, பிருந்தாபன்-40 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் பிரதீப்-02, சாகித்தியன்-02, பிரசாத்-01, சேயோன்-03 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 19.1 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பெடுத்தாட்டத்தில் சாகித்தியன்-85, பிரசாத்-14, பிரதீப்-23, ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் டினேஸன்-01, லவேந்திரா-02, அபிநாஸ்-01, பிருந்தாபன்-02, கிஷாந்துஜன்-01, லோகதீஸ்வர்-01 இலக்கினை கைப்பற்றினர். (கு)

தமிழ் யுனைட்டட் அணிக்கு இலகு வெற்றி

வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

லீக் சுற்றின் 59 ஆவது போட்டியில் தமிழ் யுனைட்டட் அணியை எதிர்த்து மாதோட்டம் எப்.சி. அணி மோதியது.

15 ஆவது நிமிடத்தில் தமிழ் யுனைட்டட் அணியின் கே.சுதர்சன் முதலாவது கோலை அடித்தார். 32 ஆவது நிமிடத்தில் அதே அணியின், ஈ.இசாக் அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார். 36 ஆவது நிமிடத்தில் மாதோட்டம் அணியின் கே.திலீபன் பதில் கோல் போட்டார்.

அதன்பிறகு, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தமிழ் யுனைட்டட் அணிக்கு, ஈ.இசாக் 43, 58, 74 மற்றும் 79 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றுக் கொடுத்தார்.

86 ஆவது நிமிடத்தில் மாதோட்டம் அணியின் ஏ.நிதர்சன் அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார். முடிவில், தமிழ் யுனைட்டட் அணி, 06:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

பிளேஓவ் சுற்றில் முதலிடத்தில் ரில்கோ கொங்கியூறஸ் அணி

வடக்கு- கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 9 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

லீக் சுற்றின் 60 ஆவது போட்டியில், ரில்கோ கொங்கியூறஸ் அணியை எதிர்த்து முல்லை பீனிக்ஸ் அணி மோதியது.

போட்டி தொடங்கிய முதல், ரில்கோ அணியினரே அபாரமாக ஆடினர். 4 ஆவது நிமிடத்தில் எம்.ஹரிசம் முதலாவது கோலை அடித்து தொடக்கி வைத்தார்.

அதன் பின்னர் ரில்கோ அணி, 52, 63, 75 மற்றும் 83 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களையும் அடித்தது. எஸ்.சஜீவன் மற்றும் ஈ.ஹசான்ரி ஆகியோர் தலா 2 கோல்களை அடித்திருந்தனர்.

முடிவில், ரில்கோ கொங்கியூறஸ் அணி, 05:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியுடன், 27 புள்ளிகளைப் பெற்று, ரில்கோ கொங்கியூறஸ் அணி, பிளேஓவ் சுற்றில் முதல் நிலை அணியாக உள்நுழைந்துள்ளது. (க-26)

கௌதமன் சகல துறையிலும் அசத்தல் கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றி

J/Kokuvil Hindu College Cricket - "Under-15"

இலங்கை கிரிக்கெட் சங்கம் நடத்திய இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 15 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

அதன் ஓர் அங்கமாக கடந்த 14ஆம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் மன்னார் சித்தி விநாயகர் அணியும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 133 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சித்தி விநாயகர் அணி 22.01 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அருண் மாத்திரம் அதிகபட்சமாக 12 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

பந்துவீச்சில் கௌதமன் 6விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் பிரவீன்-81, கௌதமன்-68, கீதப்பிரியன்-24 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் அருண் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

போலோ ஒன்னுக்கு தள்ளப்பட்ட மன்னார் சித்தி விநாயகர் அணி தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 13 ஓவர்களில் 59 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் இன்னிங்ஸ் மற்றும் 133 ஓட்டங்களால் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அபார வெற்றி பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸ் பந்து வீச்சில் ஜெருசன்-6, கௌதமன்-2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (கு)

புதிய அரசியல் அமைப்பை...

அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பாக அமைச்சர் ராஜிதசேனாரத்ன தெரிவித்தமழுப்புலான கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்களால் நேற்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி எமக்கு இதை செய்ய வேண்டும் என்ற கடப்பாடு இருந்தால் எதையும் செய்யலாம் செய்ய கூடாது என்று எண்ணினால் தாமதமாகும் அதற்கு பல காரணங்கள் கூறக்கூடும்.

இது முக்கியமான விடயம் நாட்டின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் ஆவணம் தான் புதிய அரசியல் அமைப்பு, பல காலமாக இது தொடர்பாக அரசுடன் பேசிவருகிறோம். இந்த நாட்டின் ஒவ்வொரு தலைவர்களுடனும் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் பேசிவருகிறார்கள், ஆனால் என்ன நடந்தது என்று தெரியாது மக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

இவ்வளவு காலம் பேசிய பிறகு தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நடவடிக்கைகள் என்ன என்பது எல்லோருக்கும் ஓரளவு தெரியும்.தட்டிக்களிக்கும் பேச்சை தான் சிலர் கூறிவருகிறார்கள்.

ஆனால் அதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உள்ளதா என்பது தான் மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. இது தொடர்பில் போதிய அளவு தரவு உள்ளது. என்ன செய்ய வேண்டும் என்றும் தெரியும் அதை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களை தெரிவு செய்து அவற்றை சரி செய்து உடனே செய்யக்கூடிய சூழல் தற்போது உள்ளது.

எனவே இந்த அரசு அடுத்த மாதம் மார்ச் மாதத்துக்கு முதல் அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டிய கடப்பாடு உள்ளபடியால் அவர்கள் இதை செய்தே ஆக வேண்டும். செய்வார்கள் என நம்புகிறேன் என மேலும் தெரிவித்தார். (ம-9)

நல்லாட்சி அரசாங்கம்...

குணவர்தன தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்றரை வருட ஆட்சியில் நாடு அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. ஆகவே இனியும் இந்த அரசாங்கம் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க முடியாது. நாட்டில் அபிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக ஜனநாயக விரோத செயற்பாடுகளை முன்னெடுத்து எதிர்க்கருத்துள்ள அரசியல் தரப்பினரை தண்டிக்கின்றனர்.

அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைத் திட்டத்தினால் மக்கள் நாளுக்கு நாள் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எப்போதுமில்லாதவாறு வரிச்சுமை ஏற்றப்பட்டுள்ளது. ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாததால் தேசிய சொத்துகளை வெளி நாடுகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். மேலும் சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை கொண்டு வந்து பூதாகரமான நிலவரத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆகவேதான் நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராக எதிர்வரும் ஐந்தாம் திகதி கொழும்பில் பாரிய எதிர்ப்பு பேரணியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். நாடு தழுவிய ரீதியிலிருந்து கொழும்பில் அணிதிரளும் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்பில் ஈடுபடவுள்ளனர். எதிர்ப்பு பேரணி வரலாற்றில் கூடுதலான மக்கள் கலந்து கொண்ட பேரணியாக இது அமையவுள்ளது. எனவே அப்பேரணியுடன் அரசாங்கம் ஆட்டம் காண்பதுடன் அதிலிருந்து வீட்டுக்குச் செல்லும் அத்தியாயம் ஆரம்பமாகவுள்ளது என தெரிவித்தார். (ம)

சேறு பூசுவதற்கே...

அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ குற்றம்சாட்டியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்கள் நேரடியாக அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அரசாங்கம் தற்போது அடக்குமுறை, மோசடி மற்றும் மக்களின் உரிமைகளை எப்போதுமில்லாதவாறு தற்போது மீறிச் செயற்படுகிறது.

குற்றப்புலனாய்வுப் பிரிவு நேற்று மூன்று மணி நேரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தியது. இது சேறு பூசும் நடவடிக்கையாகும். குற்றப்புலனாய்வுப் பிரிவு அரசாங்கத்தின் கையாளாகச் செயற்படுகிறது. குறுகிய அரசியல் நோக்கத்திற்காக ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் அரசாங்கம் அச்சமடைந்துள்ளது. அதனாலேயே அவர்களுக்கு எதிராக இவ்வாறான கெடுபிடிகளை முன்னெடுத்து வருகிறது.

சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மூலம் நாட்டுக்கு பாரிய பாதிப்பு ஏற்படக்கூடியது. எனினும் அவ்வுடன்படிக்கை இறுதியானது இல்லையெனவும் தேவைப்படுமிடத்து ஒரு வருடத்தின் பின்னர் அதில் திருத்தம் மேற்கொள்ள முடியும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அவரின் கருத்து யதார்த்தத்திற்குப் புறம்பானதாகும். சிங்கப்பூரின் அனுமதியின்றி அவ்வுடன்படிக்கையில் திருத்தம் மேற்கொள்ள முடியாது.

மேலும் மக்களின் வாக்களிக்கும் உரிமையை அரசாங்கம் இல்லாது செய்துள்ளது. எந்தவொரு தேர்தலையும் உரிய காலப்பிரிவில் நடத்துவதாக இல்லை. ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றான வாக்களிக்கும் உரிமையை இல்லாது செய்வதனை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. ஆகவேதான் நல்லாட்சி அரசாங்கம் வீடு செல்ல வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக நாம் தெரிவிக்கிறோம் என தெரிவித்தார்,

மேலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதி நாடு தழுவிய ரீதியிலிருந்து பெருமளவிலான மக்களை கொழும்புக்கு அழைத்து வந்து அரசாங்கத்திற்கு எதிர்பினைத் தெரிவிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

2 ஆயிரம் ஆண்டுகள்...

எச்.ஏ சுமனதாச தெரிவித்தார். யான் ஓயா நீர் திசை திருப்பும் திட்ட நடவடிக்கையின் போதே இக்கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதே பிரதேசத்தில் பல தொல் பொருட்களையும் தமது குழுவினர் கண்டு பிடித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டு பிடிக்கப்பட்ட கல்லறைகளில் மூன்றை அங்கிருந்து அகழ்ந்தெடுத்து யான் ஓயா அணைக்கட்டின் அருகில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் களஞ்சியத்தில் மக்கள் பார்வைக்கு வைக்க தாம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் யான் ஓயா நீர் திசை திருப்பும் நடடிக்கையின் மூலம் கல்லறைப் பிரதேசங்கள் நீரில மூழ்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (ம)

ஜனாதிபதி, பிரதமருக்கு...

வேண்டாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தின் மூன்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தெவ் புதகம வீடமைப்பு திட்டம் மொனராகலையில் மக்கள் மயப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு வீடமைப்பு திட்டத்தை திறந்து வைத்தோம். ஏற்றுமதி கிராமமொன்றையும் ஆரம்பித்து வைத்தோம். பலருக்கு காணி உறுதியையும் வழங்கினோம். இதன்படி இந்த மாவட்டம் வறுமைக் கோட்டின் கீழேயே உள்ளது. அத்துடன் இந்த மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். இதன்படி மொனராகலையில் பாரிய மாற்றங்களை செய்யவுள்ளோம்.

மூன்றாண்டுகளில் நாம் செய்த சேவையை புத்தமாக எழுதலாம். அத்துடன் ஜனநாயகத்தையும் நாம் உறுதிப்படுத்தியுள்ளோம். சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவியுள்ளோம். நீதிமன்றத்தை சுயாதீனமாக்கியுள்ளோம். நீதிமன்றங்களின் ஊடாக ஜனாதிபதிக்கும் எனக்கு எதிராகவும் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நீதித்துறையில் நானோ ஜனாதிபதியோ தலையிடுவதில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளை கண் காணிப்பதற்கு பிரிவொன்றை ஏற்படுத்தியுள்ளோம். காணாமல் போனோர் அலுவலகம் நிறுவினோம். உள்ளூராட்சி மன்றங்களுக்கான பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தோம்.

கடன் செலுத்த முடியாமையின் காரணமாக நேரகாலத்துடன் முன்னைய ஆட்சியினர் ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றனர். நெருக்கடியான நிலைமையில் மூன்றாண்டுகள் அரசாங்கத்தை கொண்டு வந்தோம். செலவினை குறைத்து வருமானத்தை அதிகரித்தோம். வரட்சி, கடன், பெற்றோல் விலை அதிகரிப்பினையும் பொருட்படுத்தாமல் நாட்டின் பொருளாதாரத்தை காப்பாற்றினோம். கடனையும் வட்டி தவணையையும் செலுத்துவதற்கு எமக்கு போதுமான அளவு வருமானம் இருக்கவில்லை. இதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடினோம். 2025ஆம் ஆண்டு கடன் சுமையை குறைக்க முடியும்.

அத்துடன் துறைமுக நகரின் முழு உரித்துரிமையையும் சீனா வழங்கியதை நாம் ஆட்சிக்கு வந்தவுடன் குத்தகையாக மாற்றினோம். அத்துடன் அம்பாந்தோட்டையில் பாரிய அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். பாரியளவிலான முதலீட்டு வலயங்களை ஆரம்பித்து தொழில்வாய்ப்புகளை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். கண்டி முதல் அம்பாந்தோட்டை வரை அதிவேக வீதி கட்டமைப்பினை உருவாக்கவுள்ளோம். மத்திய அதிவேக பாதை நிர்மாண பணிகளை ஆரம்பித்துள்ளோம். மொரகஹகந்த மற்றும் களுகங்கை திட்டத்தையும் செயற்படுத்தியுள்ளோம் என்றார். (ம)

எதிர்வரும் 24-ம் திகதி...

லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான மகிந்த சமர சிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது, மேற்கண்ட தீர்மானம் எட்டப்பட்டுள்ளதென அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அவ்வறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் விவாதிக்கப்பட்டதன் பின்னர், அவ்வறிக்கையை நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியுமெனத் தெரிவித்த அவர், அதன் பின்னரே மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையில் நடத்துவதென்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்றார்.

மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றதெனத் தெரிவித்த அவர், அந்தத் தேர்தல், புதிய தொகுதி மற்றும் விகிதாசார முறைமைகளின் கீழ், விரைவில் நடத்தப்படவேண்டும் என்பதே தங்களுடைய கட்சியின் எதிர்பார்ப்பாகும் என்றும் குறிப்பிட்டார். (ம)

புலனாய்வாளரின் விசாரணை...

போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

ஊடகவியலாளர் கீத் நொயர்ர் கடத்தி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எம்மிடம் வாக்குமூலம் பதிவு செய்வது அரசியல் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டதாகும்.

அரசாங்கத்தின் பிரதானிகளுக்கு தெரியாமல் என்னிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்த முடியாது.

எனவே வாக்கு மூலம் பதிவு செய்தமை அரசியல் தேவைக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஐந்து பேர் என்னிடம் வாக்கு மூலம் பதிவு செய்ய வந்தனர். இதேவேளை, கரு ஜயசூரிய பேசினாரா அதன் பின்னர் கீத் நொயர் விடுதலை செய்யப்பட்டாரா என கேள்வி எழுப்பியிருந்தனர்.

கரு ஜயசூரிய பேசினாரா என்பது எனக்கு நினைவில்லை. அப்போது எத்தனை பேர் பேசியிருப்பார்கள்? இவை எல்லாம் அரசியல் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றது.

பழிவாங்கல்கள் மற்றும் சிறை பிடித்தல்கள் மூலம் எம்மை துன்புறுத்த முயற்சிக்கின்றார்கள். என்னிடம் கரு ஜயசூரிய பேசியதனைத் தொடர்ந்து நொயார் விடுதலை செய்யப்பட்டாராம், அப்படியென்றால் அது நல்லது தானே? கரு ஜயசூரிய எனக்கு 11.20க்கு அழைப்பினை ஏற்படுத்தியிருந்தார், அப்படியென்றால் நான் இரவு 10 மணி வரையில் விழித்திருக்கின்றேன் அது நல்ல விடயம் தான் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.(ம)

குற்றப் புலனாய்வுப்...

தொடர்பில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரிடமும், குற்றப் புலனாய்வு பிரிவினர் வாக்கு மூலம் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2008 மே மாதம் 22ஆம் திகதி, ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு, சித்திரவதைக்குள்ளான நிலையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ம)

ஜப்பானிய பாது...

திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ள அவர், 22ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தனவுடன் ஜப்பான் - இலங்கை பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளை நடத்தவுள்ளதுடன் இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவர்களையும் சந்தித்து பேசவுள்ளார். (ம)

522 ஏக்கர் கா...

பகுதி கிடைக்கப்பெற்றுள்ளது.

எஞ்சிய பகுதிக்கான அங்கீகாரம் அண்மையில் கிடைக்கப்பெற்ற நிலையில், குறித்த நிதியை பெற்றுக் கொண்டதன் பின்னர் அந்த காணிகள் விடுவிக்கப்படும் என்று இராணுவம் அறிவித்துள்ளது.

எனினும் இதற்கு ஆறு மாதங்கள் வரையில் செல்லலாம் என்றும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கின்ற வணிக சொத்துக்களை விடுவிப்பது குறித்து இன்னும் எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

வடக்கு கிழக்கில் இராணுவத்தினரால் விவசாயம் போன்ற வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், அவை பொதுமக்களுக்கு சொந்தமான இடங்களில் இருந்தால் அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நாம் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய அவர், அது குறித்து இன்னும் ஆலோசனை நடத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கில் முன்னெடுக்கப்படுகின்ற நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளில் 94 சதவீதமானவை இதுவரையில் நிறைவடைந்துள்ளன.

எஞ்சிய பணிகளை எதிர்வரும் 2020-ம் ஆண்டுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இதுவரையில் நிறைவு செய்யப்பட்ட கண்ணிவெடி அகற்றும் பணிகளில் 74 சதவீதமானவை இராணுவத்தினராலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

தெல்லிப்பழையி...

51-வது படைப்பிரிவினால் பயன்படுத்தப்பட்ட காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே ஒரு பகுதி காணி விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

த.தே.ம.மு முல்...

முன்னணியினரால் நினைவுகூரப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் யாரும் இல்லாத வேளை அங்கு சென்ற 8 படையினர் கதவை உடைத்து உட்புகுந்துள்ளனர்.

அலுவலகத்தை அவர்கள் சோதனையிட்டுள்ளனர். இதனை அயலவர்கள் நேரில் கண்டு வீட்டின் உரிமையாளருக்கு தெரியப்படுத்தினர்.

அலுவலகம் தாக்கப்பட்டமை தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் தெரிவித்தார். (ம-281)

324 பேர் மரண...

ஸ்ட் 8-ம் திகதி தொடக்கம் தற்போது வரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 324 ஆக உயர்ந்துள்ளது என்றும் 2.25 லட்சம் பேர், ஆயிரத்து 500க்கும் அதிகமான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார். (ம)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

பணிப்பெண் தேவை

இரு வயோதிபர்கள் கொண்ட குடும்பத்துடன் தங்கி நின்று பணிபுரிய பணிப்பெண் தேவை. வேதனம் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 0788762626 (5387)

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் சகல வசதிகளுடன் அமைந்துள்ள மேல் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0775035549 (5382)

வகுப்புக்கள்

போட்டிப் பரீட்சைகள், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் என்பவற்றுக்கான வகுப்புக்கள் யாழ்.நகரில் சனி, ஞாயிறு தினங்களிலும் ஏனைய நாட்களில் மாலை நேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

தொடர்பு: 0766883394 (C-3540)

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-3472)

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை (C-3499)

பதவி வெற்றிடம்

- Driver - சாரதி வெற்றிடம்
- Cashier - காசாளர் (பெண்கள்) குறைந்தபட்ச கல்வித் தகைமை - A/L, யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் மாத்திரம்.
- Sales Assistant- (ஆண்கள், பெண்கள்) குறைந்தபட்ச கல்வித் தகைமை (A/L)
- Data entry operator - (பெண்கள்) குறைந்தபட்ச கல்வித் தகைமை (A/L)

முகவரி, தொலைபேசி இலக்கம், அனுபவம் ஆகியன உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 25.08.2018க்கு முதல் அனுப்பி வைக்கவும்.

TCT Multi Trade Centre 527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே இல.: 077 776 3436 (C-3537)

வீண்போகாதையா உன் தமிழ்த் தேசியப்பற்றும் தன்மான உணர்வும் விட்டுச் சென்ற விழுதுகள் நாம் விருட்சமாய் எழுந்து நிற்போம்

மறைந்தும் மனங்களில் வாழும் தனியார் கல்வியுலகின் விழுதுகள்



நா.கிருஸ்ணானந்தன்
(பிரபல பொருளியல் பேராசான்)



வெக்ரர் வேலாயுதம்
(பிரபல இணைந்த கணித பேராசான்)



மகாதேவா
(பிரபல இரசாயனவியல் பேராசான்)

பசில் ஜெனதாஸா
(பிரபல வணிகக்கல்வி பேராசான்)

என்.ரி.தரன்
(பிரபல இந்து நாகரிக பேராசான்)

நாகரட்ணம்
(பிரபல இரசாயனவியல் பேராசான்)

இவர்களையும் இந்நாளில் நினைவுகோருகின்றோம்

சென்றன ஆண்டுகள்

4

18.08.2018

(சீ-3532)

தமிழ்த் தேசியப்பற்றாளர்

சின்னத்துரை வரதராஜன்

(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான், முன்னாள் விரிவுரையாளர், பொருளியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், ஆலோசகர் யாழ்.ஏய்ட் அறக்கட்டளை, கலிங்கம் பல்சுவை இதழ்)

வீதிச் சுவர்களில் பொருளியல் என்ற எழுத்துக்கள் தென்படும் சமயங்களில் பொருளியல் மாணவர்களுடன் அளவளவும் போதுகளில் ..தமிழர் தேசிய வளங்கள் பற்றிய எண்ணங்கள் எழும்வேளைகளில்...

வரதராஜன் என்ற மானுடனின் உயிர்ப்பு மீண்டும் மீண்டும் நிகழவே செய்யும்.

—குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.